பக்கங்கள்: 12
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 22 திங்கட்கிழமை 07.09.2020 கதிர் 302

**இது ரகசியம் அல்ல!**

கொழும்பு, வெள்ளவத்தையில் வீதியோரத்தில் ஒரு பழைய நண்பரைச் சந்தித்தேன். இந்திய ஆதரவாளர் அவர். சட்டத்துறையுடனும் தொடர்புடையவர். வழமையான குசல விசாரிப்புகளுக்குப் பின்னர் திடீரென ஒரு கேள்வி கேட்டார். பக்கம்02

# வாக்குறுதிகள் பறக்கவிடப்பட்டால் இலங்கை அரசுக்கு நடப்பதே வேறு!



## சுமந்திரன் எம்.பி. கடும் எச்சரிக்கை

கிளிநொச்சி, செப். 07

பிராந்திய வல்லரசுக்கும், முழு சர்வதேச சக்திற்கும் மூன்று தடவை கொடுத்த வாக்குறுதிகளை இலங்கை அரசு காற்றில் பறக்கவிடுமாக இருந்தால் அதுதான் இலங்கை என்ற நாடு விடும் மாபெரும் தவறாக இருக்குமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தப் பிழையினூடாக தமிழர்களின் எதிர்ப்பை மாத்திரமல்லாது, முற்போக்குச் சிந்தனையாளர்களாக இருக்கும் சிங்கள மக்களினுடைய எதிர்ப்பை மாத்திரமல்லாது, முழு உலகத்தின் எதிர்ப்பையுமே எதிர்கொள்ள நேரிடும் என அவர் எச்சரித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் பக்கம் 02

# கூட்டமைப்பு எம்.பிக்கள் புதன் முக்கிய முடிவுகள்

## நாடாளுமன்றக் குழுவின் பதவிகளும் தீர்மானமாகும்

கொழும்பு, செப்ரெம்பர் 07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு நாளை மறுதினம் (புதன்கிழமை) கூட விருக்கின்றது. அப்போது நாடாளுமன்றக் குழுவின் தலைவர், பேச்சாளர், கொறடா போன்ற பதவிகளுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுகின்றமை யுடன் இருபதாவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும் தீர்மானிக்கப்படவிருப்பதாக அறிய வந்தது பக்கம் 02

## ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆலோசகர் கோப்பாய் விபத்தில் உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், செப். 07

கோப்பாய் பூதர்மடம் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதி இடம்பெற்ற விபத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆலோசகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் பக்கம் 11

## கூட்டமைப்பு மிகவிரைவில் பதிவு செய்யப்படவேண்டும்

### வலியுறுத்துகின்றது ரெலோ

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செப். 07

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டு நிலையான கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனா கருணாகரம் தெரிவித்தார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் சார்பில் நாடாளுமன்றம் தெரிவு பக்கம் 11

## புலிகளை சிலர் விமர்சித்ததாலேயே தேர்தலில் தோற்றது கூட்டமைப்பு!

### வினோ நோகராதலிங்கம் எம்.பி சுட்டிக்காட்டு

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செப். 07

கூட்டமைப்புக்குள் இருந்த சிலர் விடுதலைப் புலிகளையும், விடுதலைப் போராட்டத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை எனக் கூறியதாலேயே கூட்டமைப்பு பாரிய தோல்வியைத் தழுவியது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற பக்கம் 11

## மாகாண சபைகளை ஒழிக்கவேண்டும்!

### சீலரத்ன தேரர் சீற்றம்



கொழும்பு, செப். 07

மாகாண சபைத் தேர்தல் மற்றும் அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பாகத் தற்போது பேசப்பட்டுவருவதால், அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளதாலும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பக்கம் 11

## ஹெரோயின் விவகாரத்தில் இங்கு தேடப்பட்ட பொலிஸ் அதிகாரியே தனுஷ்கோடியில் கைது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்.07

சட்டவிரோதமாக தமிழகத்திற்குள் ஊடுருவிய சமயம் கைது செய்யப்பட்டு உளவுத் துறை அதிகாரிகளின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள இலங்கை பொலிஸைச் சேர்ந்தவர் இங்கு ஹெரோயின் கடத்தல் தொடர்பில் தேடப்பட்ட பொலிஸ் அதிகாரி எனக் கூறப்படுகின்றது.

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக படகு மூலம் தமிழகத்துக்குள் இலங்கையை சேர்ந்தவர்கள் ஊடுருவுகின்றனர் என இராமேஸ்வரம் மெரைன் பொலிஸாருக்குக் பக்கம் 02



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*"மாகாண சபை முறைமையை சமஷ்டித் தீர்வு என்று கூறலாமா?"* – என்று கேட்டார்.

*"நான் இல்லவே, இல்லை. இப்படி ஒரு சந்தேகம் ஏன் உங்களுக்கு வந்தது?"* – என்று திருப்பிக் கேட்டேன்.

*"ஏன் அது சமஷ்டித் தீர்வு இல்லை என்கின்றீர்கள். ?"* – என்று பதில் வினாத் தொடுத்தார் அவர்.

*"தெளிவாக ஒற்றையாட்சிக்குள் ஓர் அதிகாரப் பகிர்வு கட்டமைப்பு மாகாண சபை. அவ்வளவுதான்!"* – என்று உறுதியாகவும் தெளிவாகவும் நான் பதிலளித்தேன்.

*"சரி. உங்கள் நண்பர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், சமஷ்டித் தீர்வுக்குக் கூறும் வரைவிலக்கணம் உமக்கு நினைவிருக்கின்றதா?"* – என்று கேட்டார் அவர்.

*"பக்கத்தில் தயா றோட்டில்தான் சுமந்திரனின் வீடு இருக்கின்றது. ஓர் எட்டு எட்டிக் கேட்டு விடுவோம்!"* – என்று நக்கலாக நான் பதில் சொன்னேன்.

என் நண்பர் சிரித்தார். *"அவர் யாழ்ப்பாணத்தில் பாராட்டு விழா, நன்றி தெரிவிப்பு விழா என்று படு பிஸியா இருப்பார். அவரை ஏன் தொல்லை பண்ணுகிறீர்?"* – என்று குறிப்பிட்ட அவரே தொடர்ந்தார்.

*"சமஷ்டி என்பது தொடர்பாக அவர் கூறும் வரைவிலக்கணத்தை நீர்தானே அடிக்கடி விலாவாரியாக எழுதுவீர், செய்தியாக்குவீர்...!"* – என்றார். நான் பெருமாள் மாடு மாதிரி தலையாட்டினேன்.

*"பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசாங்கம் மீளப் பறிக்க முடியாது என்றால் அது சமஷ்டிக் கட்டமைப்புத்தான். அதற்கு சமஷ்டி என்று பெயர் இருக்கத் தேவையில்லை. அப்படித்தானே சுமந்திரன் விளக்கம் கூறினார்?"* – என்று கேட்டார் எனது நண்பர்.

நான் அதற்கும் தலையாட்டினேன். அப்படித்தான் சுமந்திரன் கூட்டங்களில் முன்னர் விளக்கமளித்து வந்தார்.

*"சரி, சுமந்திரன் கூறியபடி பகிரப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு மீளப் பெற முடியாத வகையில் ஓர் அரசமைப்பு வந்தால் அது சமஷ்டி என்று ஏற்கலாம் என்பதை நாமும் ஏற்போம். ஆனால் அந்த அரசமைப்பை இப்போது மாற்றுவது போல மாற்றி, இருக்கும் சமஷ்டியை சிங்களவர்கள் மாற்றி விட்டால் என்ன செய்வது?"*

*"அரசமைப்பு மாற்றத்தாலும் மாற்ற முடியாதாக இருந்தால்தான் அது சமஷ்டியாகும்."* – என்று நானே சுமந்திரன் போல அவருக்கு ஒரு விளக்கம் – வியாக்கியானம் – கொடுத்தேன்.

'நன்றாக மாட்டிக் கொண்டீரா?' என்று கிண்டலாக கேட்பது போல அவர் ஒரு நையாண்டிச் சிரிப்புச் சிரித்தார்.

*"இப்போது அதுதானே நடக்கிறது...! 1987இல் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமையை அடியோடு அகற்றி விட கொழும்பு முயல்கின்றது. ஆனால் அதற்கு அனுமதிக்கமாட்டோம் என்ற உறுதிப்பாட்டில் இந்தியா நிற்கின்றது. நீங்கள் புதிய அரசமைப்புக் கொண்டு வந்தாலும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தம் கைவிடப்படக் கூடாது, நடைமுறைப்படுத்தப்பட்ட வேண்டும் என இந்தியா ஒற்றைக் காலில் நிற்கின்றது. மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிரும் 13ஆவது திருத்தம் புதிய அரசமைப்பில் அப்படியே இருக்க வேண்டும் என்று உறுதிப்படுத்தி நிற்கின்றது இந்தியா. அப்படி என்றால் அதிகாரப்பகிர்வுக்கு வழி செய்த 13ஆவது திருத்தத்தை நீக்க விடாமல் இந்தியா உறுதி செய்யுமானால் மாகாண சபை முறைமையும் சமஷ்டித் தீர்வுதானே...? சுமந்திரனின் வியாக்கியானப்படி அதுவும் சமஷ்டித் தீர்வு என்பதை ஒப்புக் கொள்கின்றீர்களா?"* – என்று என்னை ஒரேயடியாக மடக்கினார் அவர்.

பகிரப்பட்ட அதிகாரத்தை மீளப் பெற முடியாமல் உறுதிப்படுத்த முடியுமானால் அதுசமஷ்டிவகைத்தீர்வென்றசுமந்திரனின் சட்ட வியாக்கியானத்தை வழி மொழிந்த 'குற்றத்துக்காக' என் நண்பரின் விளக்கத்தை சரி என்று ஏற்று ஒப்புக் கொண்டு தலையசைக்க வேண்டியவனானேன் நான்.

அவரின் வாதம் தொடர்பில் உங்கள் கருத்து யாதோ.... வாசகர்களே...?

– மின்னல் –

## வாக்குறுதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கையில் –

ஓர் ஜனநாயகப் புரட்சி ஊடாக நாட்டிலே அரசியலை மாற்றி அதன்மூலம் வந்த 19ஆவது திருத்தத்தைத் தூக்கி குப்பைத் தொட்டியில் போடுகின்ற நிகழ்ச்சி ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. வரும் நாள்களிலே அது முழுமையாக நிறைவேறப் போகின்றது.

நாடு சர்வாதிகாரத்தை நோக்கிப் போகின்றது என இன்று பலர் குரல் கொடுக்கின்றார்கள். இந்த அரசை ஆதரித்தவர்கள்கூட இன்று அதற்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். இந்நிலையில் ஜனநாயகத்துக்கு விரோதமான இந்த விடயத்தை நாங்கள் எதிர்ப்போம்.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு மேலும் தள்ளிப்போவதற்கான சூழ்நிலை தென்படுகின்றது. ஆனால், அப்படியான சங்கடங்கள் ஏற்படுகின்ற வேளைகளில்தான் தீர்வுகளும் வரும்.

1983ஆம் ஆண்டு நாடுமுழுவதும் தமிழ் மக்கள் அடித்து, கலைக்கப்பட்டு, கொல்லப்பட்டு அவர்களது உடமைகள் எரிக்கப்பட்டு சூறையாடப்பட்டவேளையில்தான் இந்தியா தலையிட்டது. அக்காலப் பகுதியில் பேச்சுக்கள் இடம்பெற்று இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன் பிரதிபலனாக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. அது போதிய தீர்வு இல்லை என்பது இன்றைக்கும் எங்களுடைய நிலைப்பாடாகும். அது போதிய தீர்வில்லை என்பதை இலங்கை அரசும் பல தடவை ஏற்றுக்கொண்டுள்ளது.

விசேடமாக மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுடன் இணைந்து மூன்று தடவைகள் கூட்டறிக்கை விடுத்துள்ளார். 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவேன், அதற்கும் அப்பால் சென்று அதிகாரப் பரவலாக்கலை அர்த்தமுள்ளதாக ஆக்குவேன் என்றும் சொல்லியிருக்கின்றார். இதனடிப்படையில் தற்போது இருக்கின்ற முறைமையானது ஓர் அர்த்தமில்லாத முறைமை என்பதை ஏற்றுக் கொள்கின்றார்கள்.

அதை அர்த்தமுள்ளதாக மாற்றுவோம் எனவும் உறுதி கொடுத்துள்ளார்கள். ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படுகின்றபோது அது மக்களினால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளிடம் கொடுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அது மக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஆட்சி அதிகாரங்களாக இருக்கும். மாறாக மத்திய அரசிலே ஒரு அமைச்சர், மூன்று அரை அமைச்சர்கள் என தனிப்பட்ட ரீதியிலே அவர்களுக்கு பதவிகளைக் கொடுப்பது மக்களுக்குக் கொடுக்கின்ற ஆட்சிப் பகிர்வு அல்ல.

இப்பொழுது இருக்கின்ற மாகாண சபை முறைமையிலே ஆட்சி அதிகாரங்கள் பகிரப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் கூட அது இல்லை. சட்டவாக்கல் அதிகாரம் மாகாண சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றபோதிலும், எந்தச் சட்டத்துக்கும் அனுமதி கொடுக்கவேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

அந்த அனுமதியைக் கொடுப்பது ஆளுநரே. ஆளுநர் அனுமதி கொடுத்தால்தான் அது அந்த மாகாணத்தில் சட்டமாகும். சட்டவாக்கல் சபை அதனை நிறைவேற்றினாலும்கூட ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதியாக இருக்கின்ற ஆளுநர் கைச்சாத்திடாமல் அது சட்டமாகாது. ஆகவே சட்டவாக்க அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளிடம் முழுமையாக கொடுக்கப்படவில்லை.

நிறைவேற்று அதிகாரமும் ஆளுநரின் கைகளிலேயே உள்ளது. அமைச்சரவை அனுமதியுடன் அவர் செயற்படவேண்டும் என்று அரசமைப்பிலே கூறியிருந்தாலும்கூட, மாகாண சபைகள் சட்டம் என்ற சட்டத்தின்படி அந்த அதிகாரங்களை ஆளுநர் நேரடியாகவே உபயோகிக்கின்றார்.

ஆகையினாலே, நிறைவேற்று அதிகாரம்கூட அதிகாரப் பகிர்வு என்பதற்கு உட்படுத்தப்படாமல் மத்திய அரசின் பிரதிநிதியான ஆளுநரின் கைளிலே தொடர்ச்சியாக இருக்கின்றது. ஆகையினால்தான் மாகாணசபை முறைமை அர்த்தமில்லாது இருக்கின்றது. அதனை அர்த்தமுள்ளதாக்குவோம் என்கின்றார்கள். இந்த வாக்குறுதிகள் எழுத்து மூலமாக இன்றைய பிரதமர் ஜனாதிபதியாக இருந்தபோது கொடுக்கப்பட்ட வாக்குறுதியாகும்.

எனவே, சர்வதேசத்திற்குக் கொடுக்கின்ற வாக்குறுதிகளை இங்கே வாழ்கின்ற எமக்கு கொடுக்கின்ற வாக்குறுதிகளைப் போல தட்டிக்கழிக்க முடியாது. இந்த வாக்குறுதியானது பிராந்திய வல்லரசான இந்தியாவுக்கு கொடுத்த வாக்குறுதியாகும்.

இந்திய இந்த விடயங்களில் தலையிட்டு தன்னுடைய நல்லெண்ணத்தின் மூலமாக இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன்வந்தபோது பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் தனது பிரதிநிதியை உடனடியாக இலங்கைக்கு அனுப்பிய போது இலங்கை அதனை ஏற்றுக்கொண்டது.

தலையீடு செய்து மேற்கொள்ளப்பட்ட சர்வதேச ஒப்பந்தம் இன்றும் அமுலில் இருக்கின்றது. ஆகவே, தமிழ் மக்களுக்கு தேர்தல் காலங்களில் கொடுக்கின்ற வாக்குறுதிகளைப்போல் அல்லாது சர்வதேசத்துக்கு விசேடமாக அண்டை நாடான இந்தியாவிற்கு வழங்கிய வாக்குறுதிகளை அவ்வளவு இலகுவாக மீறமாட்டார்கள். மீறவும் முடியாது.

இந்தியாவுக்கு மட்டுமல்லாது மேலைத்தேச நாடுகளனைத்திற்கும் முழு சர்வதேசத்திற்கும் வாக்குறுதிகளை கொடுத்திருக்கின்றார்கள். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 47 உறுப்பு நாடுகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கண்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்படுகின்ற நாடுகள்.

அத்தனை நாடுகளுக்கும் இலங்கை அரசு வாக்குறுதி கொடுத்திருக்கின்றது. அங்கும் மூன்று தடவைகள் வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு இணை அனுசரணை கொடுத்திருக்கின்றார்கள். இந்தியாவுக்கு எவ்வாறு மூன்று தடவை எழுத்திலே வாக்குறுதி கொடுத்தார்களோ அதேபோன்று முழு சர்வதேசத்திற்கும் இலங்கை அரசு மூன்று தடவை எழுத்திலே வாக்குறுதி கொடுத்திருக்கின்றது.

அந்த வாக்குறுதிகளிலும்கூட கூடுதலான அதிகாரப் பகிர்வின் ஊடாக ஓர் புதிய அரசமைப்பை உருவாக்குவதன் மூலம் மீள நிகழாமைக்கான உத்தரவாதத்தினை கொடுக்கின்றோம் என சொல்லியிருக்கின்றார்கள். நிலைமாறுகால நீதியிலே நான்காவது தூணாகச் சொல்லப்படுவது இந்த மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதமாகும்.

ஓர் புதிய அரசமைப்பின் ஊடாகவே இந்த மீள்நிகழாமைக்கான உத்தரவாதத்தினை வழங்குவதாக இலங்கை அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. அதிகாரப் பகிர்வை மேலும் அதிகரிப்பதன் ஊடாக அதனை உறுதிப்படுத்துவதாக அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்கள்.

ஆகையினால், இன்றைக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இந்த நாட்டிலே அவர்கள் பெற்றிருக்கின்ற ஒரே காரணத்திற்காக பிராந்திய வல்லரசுக்கு மூன்று தடவை கொடுத்த வாக்குறுதியையும், முழு சர்வதேசத்திற்கும் மூன்று தடவை கொடுத்த வாக்குறியையும் காற்றிலே இலங்கை அரசு பறக்கவிடுமாக இருந்தால் அதுதான் இலங்கை என்கின்ற நாடு விடுகின்ற மாபெரும் தவறாக இருக்கும்.

அதை நாங்கள் திரும்பத் திரும்ப இலங்கை அரசாங்கத்துக்கு சுட்டிக் காட்டுகின்றோம். இந்த தவறை விடவேண்டாம் என்று சொல்லுகின்றோம். தொடர்ச்சியாக நீங்கள் இந்த தவறான பாதையிலே பயணிப்பீர்களேயாக இருந்தால், எங்களுடைய எதிர்ப்பை மாத்திரமல்லாது முற்போக்கு சிந்தனையாளர்களாக இருக்கும் சிங்கள மக்களினுடைய எதிர்ப்பை மாத்திரமல்லாது முழு உலகத்தினுடைய எதிர்ப்பையும் நீங்கள் எதிர்கொள்ள நேரிடும் – என்றார்.

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத்திற்கு சாவுமணியடிக்கும் வகையிலான முன்மொழிவுகளைக் கொண்டுள்ள இருபதாவது திருத்தச்சட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்விதமான இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது தொடர்பில் நாடாளுமன்றக் குழுவிலேயே தீர்க்கமான முடிவுவொன்றை எடுக்கவுள்ளதாக அதன் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

1978ஆம் ஆண்டு அரசமைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள 19ஆவது திருத்தச்சட்டத்தில் காணப்படுகின்ற ஜனாதிபதிக்குரிய மட்டுப்பாடுகள் மற்றும் சுயாதீன ஆணைக்குழு, நாடாளுமன்றம் தொடர்பான விடயங்களில் மாற்றங்களைச் செய்வதற்கான 20ஆவது திருத்தச்சட்டமூலத்தினை அரசாங்கம் வர்த்தமானியில் அறிவித்துள்ளது. இந்நிலையில் அச்சட்டமூலம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு மற்றும் அதுதொடர்பிலான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

20ஆம் திருத்தச்சட்டமூலமான வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள விடயங்கள் தொடர்பில் நாம் ஆழ்ந்த கரிசனை கொண்டிருக்கின்றோம். குறிப்பாக ஜனநாயகத்திற்கு சாவுமணி அடிக்கும் வகையிலான விடயங்கள் தொடர்பில் நாம் அதீத கவனம் செலுத்தியுள்ளோம்.

எனவே இந்த விடயத்தினை நாம் பக்குமாக கையாள வேண்டியுள்ளது. ஜனநாயகத்தினை பாதுகாக்கும் அதேநேரம், எமது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஆகவே 20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எமது தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக நாடாளுமன்றக்குழு கூடவுள்ளது. எதிர்வரும் எட்டாம் திகதி (நாளை) நாடாளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ள நிலையில் எமது உறுப்பினர்கள் அனைவரும் சமுகம் தரவுள்ளனர்.

அதன்போது நாம் இந்தக் கருமம் தொடர்பில் கவனம் செலுத்தி முடிவுகளை எடுக்கவுள்ளோம். பெரும்பாலும் செவ்வாய் அல்லது புதன் எமது நாடாளுமன்றக்குழு கூடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன. இதேவேளை இந்த விடயம் சம்பந்தமாக நாம் ஏனைய அரசியல் கட்சிகளுடனும், தலைவர்களுடனும் கலந்துரையாடவுள்ளோம். இந்த விடயத்தில் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பில் ஆராயவுள்ளோம். – என்றார்.

## ஹெரோயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த இரகசிய தகவலையடுத்து தனுஷ்கோடி கடற்கரை ஓரத்தில் வியாழன் இரவு ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது கம்பிபாடு கடற்கரையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்த ஒருவரைப் பிடித்து விசாரணை செய்தனர்.

அவர் தாம் இலங்கை மொனராகலை மாவட்டத்தை சேர்ந்த பிரதீப் குமார் பண்டாரநாயக்க (வயது 30) என விசாரணையின் ஆரம்பத்தில் தெரிவித்தார். பிடிபட்டவர் சிங்களம் பேசியமையால் மத்திய உளவுத்துறை அதிகாரிகள் அவரைத் தீவிரமாக விசாரித்தனர். சந்தேக நபரிடம் இருந்து இரு கைத் தொலைபேசிகள் மீட்கப்பட்டன. 0779207890 இலக்க தொலைபேசியை அவர் உடைமையில் வைத்திருந்தார். மீட்கப்பட்ட கைத்தொலைபேசிகளின் இலக்கத்தின் அடிப்படையில் விசாரணைகள் தொடர்ந்தன.

அவர் தாம் 1991ஆம் ஆண்டு பிறந்தார் எனவும், 95297 இலக்கத்தில் இலங்கை பொலிஸில் பணியாற்றினார் எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இந்தியாவிற்குத் தப்பிச் சென்ற பொலிஸ் அதிகாரி உபபரிசோதகர் தரத்தைச் சேர்ந்தவர் எனவும் இலங்கையில் இடம்பெறும் வழக்கு விசாரணைக்காக தேடப்படுவதனால் இலங்கை அரசு இந்திய அரசிடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்து அவரை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# ரெலோ எம்.பிக்களுக்கு யாழில் வரவேற்பு





தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின்(ரெலோ) நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் ஜனா கருணாகரம் ஆகியோர் வரவேற்பளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் ரெலோவின் தேசிய அமைப்பாளர் குருசாமி சுரேந்திரன், முன்னாள் வடக்கு மாகாண மாகாண சபை உறுப்பினர்களான சபா.குகதாஸ், விந்தன் கனகரட்ணம், புவனேஸ்வரன், யாழ் மாநகர சபை பிரதி மேயர் து.ஈசன் மற்றும் கட்சி, பிரதேச அமைப்பாளர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் முக்கியஸ்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## புதிய அரசமைப்பில் 13 க்கு முற்றுப்புள்ளி

### இந்தியா தலையிட்டு எந்தப்பயனும் இல்லை என்கிறார் அமைச்சர் விமல்

கொழும்பு,செப். 07

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமும் 19ஆவது திருத்தச் சட்டமும் நாட்டுக்குச் சாபக் கேடாக அமைந்துள்ளன. இரண்டுக்கும் புதிய அரசமைப்பில் முடிவு காணப்படும். 20 ஆவது திருத்தச் சட்டமூலம் தற்காலிக ஏற்பாடேயாகும்.

– இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை சிறப்புத் தூதுவர் மூலம் கையாள இந்தியா முயற்சிக்கின்றது என வெளிவந்த செய்தி தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய அரசமைப்பில் 13ஆவது திருத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றே நம்புகின்றோம். இதில் நாம் உறு தியான நிலைப்பாட்டில் இருக்கின்றோம். இதில் இந்தியா தலையிடுவதால் எந்தப் பயனும் இல்லை.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை தொடர 13ஆவது திருத்தமும் ஒரு காரணமாக இருக்கின்றது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமும் 19ஆவது திருத்தச் சட்டமும் நாட்டுக்குச் சாபக்கேடாக அமைந்துள்ளன. இரண்டுக்கும் புதிய அரசமைப்பில் முடிவு காணப்படும்.

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட வுள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் தற்காலிக ஏற்பாடே. அதன் பின்னர் வரவுள்ள புதிய அரசமைப்பு ஆபத்தான திருத்தங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும்.

எனவே, புதிய அரசமைப்பில் இந்தியா விரும்பும் 13ஆவது திருத்தத்தின் பரிந்துரைகளை உட்புகுத்த அரசு நடவ டிக்கை எடுக்கவேமாட்டாது – என்றார்.

## மட்டக்களப்பு - கொழும்பு வீதி விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

மட்டக்களப்பு – கொழும்பு நெடுஞ்சாலையில் ஆறுமுகத்தான்குடியிருப்பில் நேற்று ஞாயிற்றுகிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தரொருவர் உயிரிழந்துள்ளார் என ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொம்மாதுறை கலைவாணி வீதியைச் சேர்ந்த கிட்ணபிள்ளை குபேந்திரன் (வயது 46)என்பவரே உயிரிழந்துள்ளார் என அவரது உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

ஆறுமுகத்தான்குடியிருப்பிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் பங்கு கொண்டு விட்டுத் தனது சைக்கிளில் பிரதான வீதியூடாக வீடு திரும்பும்போது பின்னால் வந்த டிப்பர் மோதி விபத்துக்குள்ளானதில் இவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் உடற்கூற்றாய்வுப் பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.

டிப்பர் வண்டியின் சாரதியை ஏறாவூர்ப் பொலிஸார் கைதுசெய்து மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## முன்னாள் பெண் போராளியே தனங்களப்பு விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், செப்.07

யாழ்.சாவகச்சேரி, தனங்களப்பு, அறுகுவெளி, ஐயனார்கோவிலடியில் நேற்று இடம்பெற்ற டிப்பர் மோட்டார் சைக்கிள் விபத்தில் முன்னாள் போராளியான குடும்பப் பெண்ணே உயிரிழந்துள்ளார் என அடையாளம்காணப்பட்டுள்ளார்.



மோட்டார்சைக்கிளில் பயணித்த உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய முன்னாள் போராளியான துசாந்தி என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

முன்னாள் போராளியான குறித்த குடும்பப் பெண் ஒரு காலை இழந்தநிலையில் செயற்கைக் கால் பொருத்தியுள்ளார்.

(விபத்து பற்றிய விவரமான செய்தி 8 ஆம் பக்கத்தில்)

BRRENS
FASHION PLANET
பிறென்ஸ் பஷன் பிளானட்
Mens & Womens Wears
Our Special,,
Ladies all Dress Stitching (Trailoring) &
Wedding Saree Blouse Arriworks
Tel: 021 2212777, 076 786 9933, 075 527 9110, 077 332 1937
Fb. Brrens Fashion Planet
Email . brensfashionplanet@gmail.com
No.65, Sivan Temple,
North Road, Jaffna.

அன்னா விரைவுப் பொதிகள் சேவை
8 kg/ 11kgக்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்
பிரான்ஸ் - ரூ.1500/ ரூ.1300
ஜேர்மனி - ரூ.1500/ ரூ.1300
டென்மார்க - ரூ.1500/ ரூ.1300
கொலன்ட் - ரூ.1500/ ரூ.1300
பெல்ஜியம்- ரூ.1500 / ரூ.1300
இத்தாலி - ரூ.1650 / ரூ.1400
லண்டன் - ரூ.1600 / ரூ.1150
070 330 5500
075 330 5500
076 122 1566
மேலே உள்ள சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.(வரி உள்ளடக்கப்பட்டுள்ளது)
லண்டன்-1050/= , பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/=
சுவிஸ்- 1350/= கனடா- 1450/= (வரி உள்ளடக்கப்பட்டுள்ளது)
இந்தியா – டுபாய் – சைனா நாடுகளில் பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ள ( துணிப்பொருட்கள் தவிர)

## நாட்டுக்கான செயற்பாடே 20 ஆவது திருத்தச் சட்டம்!

### சபாநாயகர் தெரிவிப்பு



20ஆவது திருத்தச் சட்டமூலம் நாட்டுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடே எனச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஆளும் தரப்பில் ஒரு விதமாகவும் ஏனைய கட்சிகள் ஒருவிதமாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்ற நிலையிலேயே 20ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பான இந்த கருத் தைச் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

20 ஆவது திருத்தச்சட்டமூலத்தை அனை வரது ஒத்துழைப்புடன் தான் நாம் நிறைவேற்ற வேண்டும் என்றும் இதற்கு நாடாளுமன்றில் அனைவரது ஒத்துழைப்பும் அவசியமெனவும் இது நாட்டுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடு. இது ஒரு தரப்பை மட் டும் சார்ந்து இருக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார் .

நாட்டுக்கு நல்லது நடக்கும் என்று எதிர்பார்த்துநாம்தான் கடந்த அரசாங்கத்தின்போது 19 ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டுவந்தோம். ஒருவர் மாத்திரமே எதிர்ப்பினை வெளியிட்டிருந்தார் ஆனால், எமது எண்ணம் நிறைவேறியதா? இல்லையா? என்பதில் சந்தேகம் உள்ளது – என்றார்.

Cartoon Style caricatures
தனிநபர் ஜோடி படங்கள்
பிறந்தநாள், திருமண வாழ்த்துகள்
வரைந்து அச்சிட்டுத்தர, மின்னஞ்சல் செய்ய
கட்டணம் ரூபா 1500 இலிருந்து


விபரங்களுக்கு: கோகுலம்- 0769 355 944
https://www.facebook.com/TamilArtAttack

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# என்ன செய்யப் போகின்றோம்?

நடந்து முடிந்த தேர்லில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைத்த உற்சாகத்தில் அவசர அவசரமாக புதிய அரசமைப்பை உருவாக்க முனைகின்றது கொழும்பு அரசு.

நாட்டில் நடைமுறையில் இருக்கும் 1978ஆம் ஆண்டின் அரசமைப்பின் படி அரசமைப்பை மாற்றுவதற்கோ, திருத்துவதற்கோ, புதுப்பிப்பதற்கோ உரிய வழிமுறைகள் உண்டு.

முற்றிலும் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அங்கீகாரத்துடன் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்கள் அனுமதி பெற்றால் போதும். அதற்கு உயர்நீதிமன்றத்திடம் விடயத்தை எடுத்துக் செல்லவே தேவையில்லை.

அரசமைப்பின் சில பகுதிகளை மாற்றியமைப்பது அல்லது திருத்துவது என்றால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரம் அதற்குத் தேவை. அத்துடன் நாடாளுமன்ற அங்கீகாரத்துடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறவேண்டுமா என்பது குறித்து உயர்நீதிமன்றத் தீர்மானம் பெறப்பட வேண்டும். நீதிமன்ற வழிகாட்டல்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

புதிய அரசமைப்பை உருவாக்க விழையும் ராஜபக்ஷக்கள் அரசு, அதற்காக மக்களிடம் செல்ல விரும்பவில்லை எனத் தெரிகின்றது. எனவே தற்போதைய அரசமைப்பில், சர்வஜன வாக்கெடுப்பை வலியுறுத்தாத சரத்துகள் – பிரிவுகள் – போன்றவற்றை மாற்றுவதுடன் புதிய அரசமைப்பு மாற்ற முயற்சி சுருங்கிவிடும் என்றே தோன்றுகின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றிப் பேசப்படுகின்றது. அரசமைப்பு என்றால் என்ன?

ஒரு நாட்டில் மீயுயர் சட்டம், அனைவரையும் கட்டுப்படுத்தும் மிக அதிகாரம் கூடிய ஒழுங்கு விதி என்றெல்லாம் அது குறித்துக் கூற முடியும்.

அது எல்லாவற்றையும் தாண்டி அது ஒரு சமூக ஒப்பந்தம். நாட்டில் வாழும் சமூகங்கள், இனங்கள், தரப்புகள் தாம் ஒற்றுமையாகவும், இணங்கியும், உரிய கௌரவத்துடனும், தரத்துடனும் இசைந்து வாழ்வதற்கு சம்மதிக்கு ஓர் உடன்பாடு.

எண்ணிக்கையில் கூடிய ஒரு தரப்பு எண்ணிக்கையில் குறைந்த தரப்பு மீது சட்ட விதிகள் என்ற பெயரில் வல்வந்தமாகத் திணிக்கும் ஒழுங்கு விதிகளுக்குப் பெயர் அரசமைப்பு அல்ல. அப்படிச் செய்தால் அதற்குப் பெயர் ஆக்கிரமிப்புச் சட்டங்கள் அல்லது அதிகார ஒழுங்கு விதிகள்.

1972 இல் கொண்டு வரப்பட்ட முதலாவது குடியரசு யாப்பும், அதன் பின் 1978இல் கொண்டு வரப்பட்டு இப்போது வரை நடைமுறையில் இருக்கும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை நிலை நிறுத்தும் தற்போதைய அரசமைப்பும் இலங்கைத் தமிழர்கள் மீது அவ்வாறு பலவந்தமாகத் திணிக்கப்பட்ட ஆக்கிரமிப்புச் சட்டங்களே.

ஜனநாயகத்தின் பெயரால் அரங்கேறிய மிகப்பெரிய கேலிக் கூத்து அவை.

இந்த இரண்டு அரசமைப்பு உருவாக்கங்களிலும் தமிழர்கள் சம்பந்தப்படவில்லை. அவர்களது கருத்துக்கள், எதிர்பார்ப்புகள், அபிலாஷைகள், வேணவாக்கள் கருத்தில் கொள்ளப்படவேயில்லை.

இலங்கையில் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை சர்வதேசத் தரப்புகள் பலவும் அங்கீகரித்து நிற்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

தமிழர்கள் ஏற்றுக் கொள்ளாத ஒரு சட்டம் அவர்கள் மீது திணிக்கப்பட்டு, அதன் கீழ் அவர்கள் ஆக்கிரமிக்கப்பட்டு ஆளப்படுகின்றமையால் அவர்களின் உரிமைப் போராட்டம் நியாயமானது என்று பல சர்வதேசத் தரப்புகள் கருதுகின்றன.

தமிழர்களின் முழுப் பங்களிப்போடு ஒரு புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சி நல்லாட்சி அரசின் கீழ் முன்னெடுக்கப்பட்டது. ஒரு நகல் யாப்பு வடிவத்தை உருவாக்கும் நிலைமை வரை அது முன்னேற்றம் கண்டது. பௌத்த, சிங்களப் பேரினவாதமும், பதவி ஆசை பிடித்த – தீர்க்கதரிசனமற்ற – சில சிங்கள அரசியல் தலைமைத்துவங்களும் சேர்ந்து அந்தப் பொன்னான வாய்ப்பைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டன.

இப்போது மீளவும் புதிய அரமைப்பு உருவாக்க முயற்சி என்ற ஆரவாரம் தொடங்கியிருக்கின்றது. ஆனால் இம்முறை தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய சிறுபான்மை இனத் தரப்புகளின் கருத்தை உள்வாங்கி, அதனைத் தயாரிக்கும் எண்ணம் அதனை முன்னெடுக்கும் பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்குத் தரப்புகளுக்கு அடியோடு இல்லை என்பது இப்போதே வெளிப்படுத்தப்பட்டு விட்டது.

ஆகவே, வரக்கூடிய புதிய அரசமைப்பு அல்லது திருத்தப்பட்ட அரசமைப்பு, இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களையும், அனைத்து மத மக்களையும் சகல மொழிகளையும் பேசுகின்றவர்களையும் ஒன்றிணைக்கும் சமூக ஒப்பந்தமாகக் கட்டவிழப் போவதில்லை.

இத்தகைய வரலாற்றுத் திணிப்பு மீண்டும் ஒரு தடவை வல்வந்தமாகக் கட்டவிழப் போவதை சிறுபான்மையின தமிழ் – முஸ்லிம் தலைவர்கள் எப்படி எதிர்கொள்ளப் போகின்றார்கள்?

வெறும் பதவி ஆசைக்காக – வருமானச் சுகத்துக்காக – சுய அரசியல் லாபங்களுக்காக – தென்னிலங்கையின் இத்தகைய முயற்சிகளுக்குத் துணைபோய் வரலாற்றுத் துரோகிகளாகப் போன்றனரா? அல்லது உரிமைக்காகத் தனித்துவத்தோடு குரல் கொடுத்து நீதிக்காக உழைக்கப் போகின்றனரா? வரலாறு அதனைப் பதிவு செய்யக் காத்திருக்கின்றது.

# மட்டக்களப்பு போரதீவுப்பற்றில் காட்டு யானைகள் அட்டகாசம்!

## மயிரிழையில் தப்பிய குடும்பம்



மட்டக்களப்பு – போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர்பிரிவுக்குட்பட்ட வேத்துச்சேனைக் கிராமத்திற்குள் புகுந்த 3 காட்டு யானைகளால் அக்கிராமமே விடிய விடிய கண் விழித்திருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை ஒரு மணியள வில் கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானைக் கூட்டம் வீடுகளை அடித்து உடைத்துள்ளதுடன், வீடுகளில் மக்கள் தமது உணவுக்காக வைத்திருந்த நெல் மூட்டைகளையும் உண்டு, வேலிகள் மற்றும் நெல்குற்றும் ஆலை ஒன்றையும் முற்றாகச் சேதப்படுத்தி விட்டுச் சென்றுள்ளன.

இதுகுறித்து மயிரிழையில் உயிர் தப்பிய 4 பிள்ளைகளின் தந்தையான சீனித்தம்பி கோபாலசிங்கம் கருத்து தெரிவிக்கையில் –

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த எமக்கு அதிகாலை ஒரு மணியளவில் வெளியில் ஏதோ சத்தம் கேட்டது.

நான் மாத்திரம் வெளியில் வந்து பார்த்தேன், மிகவும் உயரமான யானை ஒன்று எமது வீட்டை நோக்கி வருவதை அவதானித்தேன்.

பின் உறக்கத்திலிருந்த மனைவி பிள்ளைகளை எழுப்பிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி வீதிக்கு வந்துவிட்டோம்.

பின் இன்னுமொரு யானை வந்தது, இரண்டு யானைகளுமாக எமது வீட்டின் முன் சுவர் பகுதியை உடைத்து உள்ளிருந்த நெல் மூட்டைகளை இழுத்து நிலத்திலே கொட்டி உண்டன.

இந்நிலையில் கிராம மக்கள் ஒன்றுகூடி விட்டனர். யானைகள் எமது வீட்டை உடைப்பதை அவதானித்த நாம் அயலவர்களின் உதவியுடன் தீப்பந்தம் ஏந்தியும், உரக்கச் சத்தமிட்டும் யானைகளைத் துரத்த முயற்சித்தோம். எம்மைப் பொருட்படுத்தாத அந்த யானைகள் எம்மை தாக்குவதற்கு வந்தன.

நாம் வீட்டிற்குள்ளே உறக்கதிலிருந்து எழும்பாமல் இருந்திருந்தால் எமது 4 பிள்ளைகளைகளும் நாமும், உயிரிழந்திருப்போம். மயிரிழையில் தான் உயிர் தப்பினோம்.– என்றார்.

இந்நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் மற்றுமொரு வீட்டை மற்றொரு காட்டு யானை தாக்கியது. அவ்வீட்டிலிருந்தவர்கள் கூக்குரலிட அந்த யானை அவ்வீட்டின் ஜன்னல் பகுதியை தாக்கிவிட்டுச் சென்றுள்ளது.

இது குறித்து வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவித்த போதிலும் கிராமத்தில் நிலை கொண்டிருந்த காட்டு யானைகளைத் தாங்கள் ஒருவாறு வெளியேற்றிய பின்னர் தான் அவர்கள் வந்து சேர்ந்தார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

## மதுபான போத்தல் மோசடி:

# சுங்க அதிகாரிகள் மூவருக்கு மறியல்

வெளிநாட்டிலிருந்து மதுபானம் இறக்குமதி செய்து அதை மீள் ஏற்றுமதி செய்யும் சுங்க தீர்வையற்ற திட்டத்தின் கீழ், மோசடி செய்த சுங்க பரிசோதகர்கள் மூவர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ லங்கா சுங்கத்திணைக்களத்தின் பிரதான பரிசோதகரான பாணந்துறை, கொரகாபொல குமாரதுங்க முனிதாஸ மாவத்தையைச் சேர்ந்த ரணவக்க ஆரச்சிகே காமினி பெரேரா, சுங்க திணைக்களத்தின் பரிசோதகர்களான கந்தான, நாகொட பியனம மாவத்தையைச் சேர்ந்த மாபலகம ஆரச்சிகே நிஷாந்த லக்சிரி, களுத்துறை, நாகொட, மூன்றாம் ஒழுங்கை கே.பி. கசுன் கயத்ரி பதிரகே ஆகிய மூவருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச் சந்தேக நபர்கள் நீண்டகாலமாக இவ்வாறு மோசடிகளைச் செய்து வந்துள்ளனர் என ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக பொலிஸ் குற்றத்தடுப்பு பிவிரினர் கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் தெரியப்படுத்தியுள்ளனர்.

சீதுவையிலுள்ள வெளிநாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்யும் தனியார் நிறுவனமொன்று, தீர்வையற்ற களஞ்சியங்களிலிருந்து மீள் ஏற்றுமதி செய்வதற்காக கொண்டு வரப்பட்ட குறித்த வெளிநாட்டு மதுபானங்களான, உயர் ரக விஸ்கி, பிராண்டி, வொட்கா போன்ற 924 மதுபான போத்தல்களுக்குப் பதிலாக அதற்கு சம அளவிலான தண்ணீர்ப் போத்தல்களை நிரப்பி இம்மோசடியை மேற்கொண்டு வந்துள்ளமை, குற்றப் புலனாய்வு பிரிவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த மீள் ஏற்றுமதிக்கான அனுமதியைப் பெற்றிருந்த தனியார் நிறுவனம், அதை சுங்கத் திணைக்களத்தின் பரிசோதகர்களின் மேற்பார்வையின் கீழ் சீதுவையிலுள்ள சுங்கத் தீர்வையற்ற களஞ்சியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அதன்பின் அவற்றை தயார்செய்து மீள் ஏற்றுமதி செய்ய வேண்டும்.

இத்திட்டம் இவ்வாறு இருக்க துறைமுகத்தின் சுங்கத்திலிருந்து எடுத்து வந்த குறித்த மதுபானங்கள், குறித்த நிறுவனம் அமைந்துள்ள சீதுவைக்கு செல்லாது, பேலியகொடை, நுகே வீதியில் உள்ள இரகசிய களஞ்சியசாலை ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மதுபான போத்தல்களுக்கு பதிலாக, அங்கு ஏற்கனவே தயார் நிலையில் இருக்கும் தண்ணீர் போத்தல்கள் மாற்றப்பட்டு சீதுவைக்கு எடுத்துச் செல்லப்படும் விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யும் இம்மதுபானங்கள் அடங்கிய லொறி வண்டிகள் சீலிடப்பட்டு துறைமுகத்திலிருந்து சீதுவை களஞ்சியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். இவ்வாறு மோசடி செய்யும் லொறிகள் துறைமுகத்தில் சீலிடாமல் வெளியில் கொண்டுவரப்பட்டு நுகே வீதியில் இரகசிய களஞ்சியசாலைக்கு எடுத்துச் சென்றதன் பின் போத்தல்கள் மாற்றப்பட்டு பின் சீலிடப்பட்டு சீதுவைக்கு எடுத்துச் செல்வதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுங்க களஞ்சியத்திலிருந்து இவ்வாறு செல்லும் குறித்த லொறியின் பின்னால் மற்றுமொரு வாகனத்தில் செல்லும், சுங்க அதிகாரிகள் குறித்த இரகசிய இடத்திற்கு சென்று இம்மோசடியை மேற்கொண்டு வருகின்றமை அம்பலமாகியுள்ளது.

சுங்கத் திணைக்கள பிரதம பணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் இரகசியப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# முட்டை விலை 2 ரூபா குறைப்பு

முட்டையின் விலை 2 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வெள்ளை முட்டை மொத்த விற்பனை விலையாக 19 ரூபா 50 சதம் என்றும், சிவப்பு முட்டையின் விலை 20 ரூபா என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெள்ளை முட்டை சில்லறை விலையாக 21 ரூபா என்றும், சிவப்பு முட்டை சில்லறை விலையாக 22 ரூபா என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இன்று திங்கள் முதல் இப்புதிய விலை அமுலில் இருக்கும்.

# இல்மனைட் அகழ்வுக்கு எதிராக அம்பாறையில் மக்கள் ஆர்ப்பாட்டம்





அம்பாறை மாவட்டத்திற்குட்பட்ட திருக்கோவில் மற்றும் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கடற்கரை பிரதேசங்களில் பாரிய இல்மனைட் அகழ் வுக்கான செயற்பாடுகளை எதிர்த்து மக்கள் எதிர்ப்பு ஆர்பாட்டம் ஒன்றை நேற்று முன்தினம் நடத்தியிருக்கின்றனர்.

“சரியான சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்தல் தொடர்பான எந்தவிதமான அறிக்கைகளும் இன்றி மக்கள் அபிப்பிராயங்களை பெற்றுக்கொள்ளாமல் மேற்கொள்ளும் கனிய அகழ்வு நடவடிக்கையை உடன் நிறுத்துஎனும் தொனிப் பொருளில் சுலோக அட்டையை ஏந்திய வாறு திருக்கோவில் மற்றும் தாண்டியடி மக்கள் பாரிய எதிர்ப்பு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

தாண்டியடி பிரதான வீதியிலிருந்து நேற்றுமுன்தினம் காலை ஆரம்பமாகிய இந்த ஆர்ப்பாட்டமானது பிரதான வீதி வழியாக பேரணியாக சென்று தாண்டியடி பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பு மீண்டும் வாகனப் பேரணியாக திருக்கோவில் மணிக்கூட்டுகோபுரம்வரை இடம்பெற்றது. பின்னர் திருக்கோவில் மற்றும் தாண்டியடி மக்கள் கால்நடையாக திருக்கோவில் பிரதேச செயலகத்திற்குச் சென்று பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனிடம் இல்மனைட் அகழ்வுக்கு அரசு அனுமதியளிக்க கூடாது என்ற மக்களின் கோரிக்கை அடங்கிய மகஜரைக் கையளித்தனர்.

இந்த ஆர்பாட்ட பேரணியில் அம்பாறை மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மற்றும் திருக்கோவில் பிரதேசசபை தவிசாளர் இ.வி.கமலராஜன், காரைதீவு பிரதேசசபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பொத்துவில் பிரதேசசபை உபதவிசாளர் பி.பார்த்தீபன், பிரதேசசபை உறுப்பினர் ரி.சுபோதரன், மக்கள் செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீபன் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை திருக்கோவில் பிரதேசத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு இல்மனைட் அகழ்வுக்காக ஆஸ்திரேலிய கம்பனி ஒன்றினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டம் மக்களின் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்தவாரம் மீண்டும் திருக்கோவில் தாண்டியடி கடற்கரை பகுதியில் அரசதுறையைச் சார்ந்தவர்கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு இல்மனைட் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை -

**யாழ் பிரதேசத்தில் -**

உடுப்பிட்டி, பொலிகண்டி, வல்லை, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, அக்கரை, வளலாய் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில் -**

வாரிக்குட்டியூர்,பம்பைமடுவிலிருந்து குருக்கள் புதுக்குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து செங்கற்படை, வேளாங்குளம் கடற்படை முகாம், பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், நித்தியநகர் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில் -**

முள்ளிக்குளம், கரடிக்குழி, கொக்குபடை யான், கொண்டாச்சி, முசலி, சிலாவத்துறை கடற்படைமுகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும்,மின்விநியோகம் தடைப்படும் என்று மின் பொறியிலாளர் அறிவித்துள்ளார்.

## யாழ். பல்கலைக்கழகத்தில் இணையவழிக் கருத்தரங்கு

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,செப் 07

யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக நூலகம் மற்றும் தகவல் அறிவியல்துறை, திருச்சிலுவை கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து அறிவிற்கான அணுகுகையும் அறிவுப்பகிர்வும் உயர் புலமைசார் ஆய்விற்கான கருவிகளும் நுட்பங்களும் எனும் தலைப்பில் சர்வதேச இணையவழி கருத்தரங்கு யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான இந்த இணைய வாயிலான கருத்தரங்கில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா கலந்து கொண்டிருந்தார்.

இக் கருத்தரங்கானது தொடர்ந்து ஏழு நாள்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







## கிளிநொச்சி தர்மபுர பகுதியில் கசிப்பு குகை ஒன்று முற்றுகை

கிளிநொச்சி, செப். 07

கிளிநொச்சி தர்மபுர பகுதியில் கசிப்பு குகை ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கிங்ஸிலி ஹேரத் தலைமையில் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் தருமபுர பொலிஸார் மற்றும் கிளிநொச்சி சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இந்த சுற்றிவளைப்பை நடத்தினர்.

சட்டவிரோத செயற்பாடுகளை ஒழிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் முதல் இடம்பெற்று வருவதாகவும், இரண்டாவது நாளான நேற்று கட்டைக்காடு பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தியிலீடுபட்ட இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

அத்துடன் அவர்களிடமிருந்து 176 லீற்றர் கசிப்பும் 1190 லீற்றர் கோடாவும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் 7 என்பனவும் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்டவர்கள் தருமபுர பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என தருமபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிங்ஸிலி ஹேரர் தெரிவித்தார்.

## குளத்தில் நீராடச் சென்ற சிறுமி நீரில் மூழ்கிப் பலி

### மட்டக்களப்பு வாகரையில் சம்பவம்

மட்டக்களப்பு, செப். 07

மட்டக்களப்பு, வாகரை, மீள் குடியேற்ற கிராமமான குகனேசபுரம் கிராமத்திலுள்ள குளத்தில் நீராடச் சென்ற சிறுமி, நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் ஆலம் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில், தரம் 6 இல் கல்வி பயின்றுவந்த சண்முகநாதன் விஜயரூகினி (வயது 12) என்ற மாணவியே உயிரிழந்துள்ளார்.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் மீள் குடியேற்ற கிராமமான குகனேசபுரம் காலிகோவில் வீதி 6ம் குறுக்கை சேர்ந்த சண்முகநாதன் விஜயரூகினியும் அவரது சகோதரியும் நேற்று முன்தினம் மாலை ஆலம் குளத்திற்கு குளிக்கச் சென்றபோதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## அம்புலன்ஸ் இமையாணனில் விபத்து





(லிங்கம்)

யாழ்ப்பாணம், செப். 07

மந்திகை ஆதார வைத்திய சாலையின் அம்புலன்ஸ் விபத்துக்குள்ளாகி சேதமடைந்துள்ளது.

நேற்று அதிகாலை1.30 மணியளவில் இமையாணன் குஞ்சர் கடை பகுதியில் அது விபத்துக்குள்ளாகியது.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் இருந்து அவசர நோயாளி ஒருவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்துவிட்டு மீண்டும் மந்திகை நோக்கிப் பயணித்தபோது, சில்லு ஒன்றின் காற்று வெளியேறிய நிலையில் அம்புலன்ஸ் விபத்துக்குள்ளாகியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தினால் அம்புலன்ஸின் முன்பக்கம் பலத்த சேதமடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

கடந்த வருடம் மத்திய சுகாதார அமைச்சினால் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட அம்புலன்ஸே விபத்தில் சேதமடைந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# உயர் இராணுவ அதிகாரிகள் எனக்கு மரணம் பயம் ஊட்டுவதால் ஆவதொன்றுமில்லை!

## துணிச்சலுடன் கூறுகின்றார் விக்கி



“பல உண்மைகளை அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதையும் இப்போது உணர்ந்துகொண்டுள்ளேன். அதைத் தடுக்க சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது உயர் இராணுவ அதிகாரிகள் எனக்கு மரணம் பயம் ஊட்டுவதால் ஆவதொன்றுமில்லை.

– இவ்வாறு கூறியிருக்கின்றார் வடமாகாணம் முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரான அவரின் தேர்தல் வெற்றி பற்றிய கிளிநொச்சி மக்களின் பொதுக்கூட்டம் கிளிநொச்சிச் சந்தைக்கருகில் சனியன்று காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் என்னை ஓர் உறுப்பினராக தேர்வு செய்த மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இன்று உங்கள் அன்பையும் பாசத்தையும் வெளிக்காட்டி என்னை மனம் நெகிழச் செய்துவிட்டீர்கள். ஆனாலும் என்னைப் நாடாளுமன்றம் அனுப்பி எனது சுமையைக் கூட்டிவிட்டீர்கள்.

தனித்துப் பயணிப்பது எனக்கொரு புதிய அனுபவமாக உள்ளது. அழுதாலும் பிள்ளையை அவளே பெற வேண்டும் என்பதன் அர்த்தத்தை இப்பொழுதுதான் உணர்கின்றேன். கட்சியில் பலரின் உதவி இருந்தன. நாடாளுமன்றமோ தனி மனிதப் பிரயாணமாக அமைந்துவிட்டது எனக்கு. ஆனால், என் கடமையைச் செய்ய வேண்டும் என்ற பேரவா என்னை முன்னோக்கி நகர்த்தி வருகின்றது.

‘கடமையை செய் பலனை எதிர்பாராதே’ என்றது கீதை. ஆனால், தங்கள் கடமையை நிறைவேற்றாமல், காலத்திற்கு காலம் சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என எமது அரசியல் தலைமைகள் இருந்தமையினால் தான் மக்களுக்கு எமது அரசியல் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் இப்போது ஏற்பட்டுள்ள மாற்றம் தமிழ் தேசியத்தின் எழுச்சிக்கான பாதையைத் திறந்திருக்கின்றது என்றே நம்புகின்றேன்.

இம்முறை தேர்தலில், தென்னிலங்கையின் பேரினவாத சக்திகள் மாத்திரமின்றி, நாம் பிரதானமாக விமர்சிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மாத்திரமின்றி, எம்முடன் கடந்த காலத்தில் இணைந்து நின்றவர்களும் மற்றும் என்னைத் தனிப் பயணத்திற்கு அழைத்தவர்களும் கூட எம் மீது அவதூறுகளையும் சேறடிப்புக்களையும் செய்துள்ளனர்.

விசமத்தனமான பிரச்சாரங்கள் கட்டவிழ்த்திடப்பட்ட போதும் அவைகளை எல்லாம் கருத்தில் கொள்ளாது எனக்கும் எமது கட்சிக்கும் வாக்களித்த மக்களுக்கு, குறிப்பாக கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு என் மனப்பூர்வ நன்றிகளை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

நாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறுகின்ற நிலைதான் எமது அரசியலின் முதல் பிழையாகவும் தோல்வியாகவும் அமைகின்றது என எண்ணுகின்றேன். அந்த வகையில் இத் தேர்தலில் வெற்றி பெற்ற எனக்கு முன்னால் மிகப் பெரும் கடமைகள் காத்து நிற்கின்றன.

தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு என்கின்ற எமது நிதியத்தின் வாயிலாக வடக்கு, கிழக்கு மக்களின் துயர் துடைக்கும் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம். அதற்கான காலமும் சூழலும் இப்போதே வாய்த்து வருகின்றன. புலம்பெயர் உறவுகள் மற்றும் தாயகத்தின் உறவுகளின் பங்களிப்பில் எம் மக்களுக்கான இப் பணியை நிறைவேற்றுவது எனது அவசிய கடமை என்பதை உணர்கின்றேன்.

நீங்கள் எந்த வேளையிலும் என்னைத் தொடர்பு கொள்ள முடியும். எமது கிளிநொச்சி கிளை வாயிலாக உங்கள் கோரிக்கைகளை முன்வைக்க முடியும். உடனுக்குடன் உங்களுக்கு அதற்கான தீர்வுகளும் பதில்களும் வழங்கும் வகையில் வினைத்திறனாக எமது பணிகளை ஆற்றத் தலைப்பட்டுள்ளோம்.

நான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட பின்னர் எதிர்கொள்ளுகின்ற விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் நீங்களும் அறிவீர்கள் என்று நம்புகின்றேன். இதேபோலவே மாகாண சபைக் காலத்தில் கூட பல எதிர்ப்புக்களை எதிர்கொண்டேன். அன்று இலங்கை அரசால் மாத்திரமல்ல, என்னை அழைத்து வந்த எம்மவர்களே எனக்கு எதிராக நின்றார்கள். எனக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வந்து என்னை முதலமைச்சர் பதவியில் இருந்து தூக்கி எறிய முற்பட்ட வேளையில் கிளிநொச்சியிலிருந்தும் எனக்கு ஆதரவு கொடுக்க பலர் திரண்டு வந்ததை நான் அறிவேன்.

இப்போது நாடாளுமன்றத்தில் எனக்கு எதிர்ப்பு வருகின்ற போது எம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் மௌனிகளாக இருக்கின்றார்கள். நான் பேசுவது அவர்களுக்காகவும் தான் என்பதை மறந்து நிற்கின்றார்கள்.

உலகின் மூத்த மொழி தமிழ், உலகின் மதிப்பு மிக்க செம்மொழி அது என்பதை இந்தியாவில் மாத்திரமின்றி உலக நாடுகள் பலவற்றிலும் கூறி வருகின்றார்கள். ஆனால், தென்னிலங்கையில் இருப்பவர்களுக்கு அது தெரியவில்லையா? தெரியாததைப் போல நடிக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன்.

நான் அன்று சொன்னது இதைத்தான். தமிழ் உலகின் மூத்த மொழி தமிழர்கள் இந்த நாட்டின் மூத்த குடிகள் என்றேன். தமிழ் மக்கள் இந்நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இருந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்பதற்கு இலக்கியங்களும், தொல்பொருள்களும், கல்வெட்டுக்களும் என பல ஆதாரங்கள் உள்ளன. இதனை ஆதாரங்களுடன் முன்வைத்தேன். அதற்கு எதிராக தென்னிலங்கை அரசியல்வாதிகள் போர்க்கொடி தூக்கி வருகின்றார்கள். அவர்கள் இதுகாறும் செய்துவந்த மோசடி எங்கே வெளிவந்து விடுமோ என்று அஞ்சுகின்றார்கள்.

அவர்கள் தங்கள் வரலாற்றைப் புனைகின்றார்கள். புனைந்து பேசுகின்றார்கள். நாமோ எங்களுக்கு என இருக்கின்ற உண்மையான வரலாற்றை இதுகாறும் பேசாது இருந்துவிட்டோம். இந்த உண்மைகளை நான் பேசுவது, நாட்டைப் பிரிக்கவல்ல. இனப்பிரச்சினையில் இனியாவது சிங்கள மக்கள் விட்டுக் கொடுப்புடன் நடப்பார்கள் என்ற எதிர்பார்ப்பிலேயே. அப்படி நடந்தால் இலங்கைத் தீவின் அமைதிக்கு அது வழியமைக்கும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பு. நெருக்குதல் ஒன்றுதான் பெரும்பான்மையினரை தமது மாட மாளிகைகளில் இருந்து கீழிறக்கும் என்பது எனது கருத்து.

துரதிஷ்ட வசமாக எமது தலைவர்கள் எமது வரலாற்றைப் பேசத் தயங்குகின்றார்கள். அவர்களுக்கு எமது வரலாறு பற்றி உண்மையில் தெரியாதா அல்லது தெரிந்தும் மௌனிகளாக மாறிவிட்டார்களா என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் இன்றைக்கு பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற மாணவ, மாணவியர்க்கும் பல்கலைக்கழக மாணவ, மாணவியர்க்கும் இந்த உண்மைகள் தெரியும்.

கற்றறிந்தவர்களும் அறிஞர்களும் சொல்லுகின்ற உண்மை வரலாற்றை எவர் வேண்டுமானாலும் படிக்கலாம். அறிந்துகொள்ளலாம். எங்கள் வரலாற்றை பற்றி சரியாகத் தெரியாத எமது தலைவர்கள் எப்படி சிங்களத் தலைவர்களுடன் பேச முடியும்? அல்லது அதைப் பேசத் தயங்குபவர்களால் எப்படி இனப்பிரச்சினையை தீர்த்து வைக்க முடியும்?

எல்லா வினைகளுக்கும் எதிர்வினை உண்டு என்பதை நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டிய போது, அதனைப் பிரிவினைவாதம் என்று எச்சரிக்கின்ற சிங்கள தலைவர்கள் இருக்கும் நாடாளுமன்றத்தில், எங்கள் நியாயங்களை இனத்திற்காகப் பேசுகின்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லையே! படைத்துறை உயர்தளபதி சரத் பொன்சேகா என்னைச் சுடுவோம் என்ற தொனியில் பேசியதை நீங்கள் பார்த்துக் கேட்டிருப்பீர்கள். அதாவது, சிங்கள மக்களைக் கோபம் ஊட்டியவர்களைத் தாம் சுட்டுக்கொன்றதை எனக்கு நினைவுபடுத்துவதாகத்தான் திரு.பொன்சேகா அவர்கள் சொல்லி எச்சரித்தார்.

மரணம் என்பது எல்லோருக்கும் பொது. படைத்துறை உயர் தளபதிகளுக்குங் கூட மரணம் வரும். நான் ஓய்வெடுத்து என் பேரப்பிள்ளைகளுடன் பொழுதைக் களிக்கலாம். ஆனால், வடக்கின் முதலமைச்சர் பதவிக்காக இழுத்து வரப்பட்ட எனக்கு, சில கடமைகள் இருப்பதை உணர்ந்தேன். பல உண்மைகளை அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதையும் இப்போது உணர்ந்துகொண்டுள்ளேன். அதைத் தடுக்க சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது உயர் இராணுவ அதிகாரிகள் எனக்கு மரணம் பயம் ஊட்டுவதால் ஆவதொன்றுமில்லை.

அந்த வகையில் எத்தகைய அச்சுறுத்தல்களைக் கடந்தும், அரசியல் மிரட்டல்களைக் கடந்தும் என்னுடைய குரல் உங்களுக்காக ஒலிக்கும். தம் உயிர், வாழ்வு என அனைத்தையும் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இனத்திற்காக தியாகம் செய்த இந்த மண்ணில், எங்கள் தனிப்பட்ட பாதுகாப்புக்காகவும் உயிர்வாழ்தலுக்காகவும் பொய்களைப் பேசி, மக்களுக்கு அநியாயங்களைச் செய்வது எந்த வகையிலும் நியாயம் ஆகாது என்பதை உறுதிபடச் சொல்கின்றேன். இன்றைய காலகட்டத்தில் மரணபயம் இருந்தால் அரசியல் செய்ய முடியாது.

எதற்காக என்னை நாடாளுமன்றம் அனுப்பினீர்களோ அந்தக் கடமையை நிறைவேற்றுவதை என் உயரிய கொள்கையாக, பணியாகக் கொண்டு செயலாற்றுவேன்.

எனது அன்பிற்குரிய உறவுகளே! நீங்கள் அனைவரும் பார்வையாளர்களாக இருக்காமல் பங்காளர்களாக இணைய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். நீங்கள் பார்வையாளர்களாக இருந்தால், கடந்த காலத்தைப் போன்று சிங்களத் தலைவர்கள் மாத்திரமல்லர், தமிழ் தலைவர்களும் உங்களை ஏமாற்றி விடுவார்கள்.

> “‘கடமையை செய் பலனை எதிர்பாராதே’ என்றது கீதை. ஆனால், தங்கள் கடமையை நிறைவேற்றாமல், காலத்திற்கு காலம் சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என எமது அரசியல் தலைமைகள் இருந்தமையினால் தான் மக்களுக்கு எமது அரசியல் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் இப்போது ஏற்பட்டுள்ள மாற்றம் தமிழ் தேசியத்தின் எழுச்சிக்கான பாதையைத் திறந்திருக்கின்றது என்றே நம்புகின்றேன்.”

கடந்த வருடம் முன்னாள் போராளிகளை கிளிநொச்சியில் சந்தித்தபோது, அவர்களை எமது கட்சியின் தலைமைப் பதவிகளை ஏற்க வருமாறு அழைத்திருந்தேன். பலரும் எம்முடன் இணைந்தார்கள். மீண்டும் அவர்களைத் தலைமை ஏற்க அழைக்கின்றேன். உண்மையில் மாற்றத்திற்கான இந்தப் பயணத்தை ஆரம்பித்து காலக் கிரமத்தில் தலைமைத்துவத்தை இளைய தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டும் என்பதே எனது அவா என்பதையும் சொல்லி வைத்துள்ளேன்.

அன்பிற்குரிய முன்னாள் போராளிகளே! உங்கள் இளமையை, வாழ்வை, கல்வியை என அனைத்தையும் கடந்த காலத்தில் எமது மக்களுக்காக ஈந்தீர்கள். உங்களை மதிக்காத, உங்களை தலைமையேற்க இடமளிக்காத அரசியல் என்பது எமது மக்களை ஏமாற்றும் அரசியலாகவே இருக்கும். நீங்களும் உங்கள் மேலான பங்களிப்புக்களை வழங்குவதுதான் ஏமாற்று அரசியலுக்கு முடிவாகும்.

எமது வரலாற்றில் கிளிநொச்சிக்கு என்று ஒரு மதிப்பு இருக்கின்றது. கிளிநொச்சி என்ற பெயருக்கு உலகமெங்கும் ஒரு கௌரவம் இருக்கின்றது. எமது மக்களின் குருதியாலும் கண்ணீராலும் ஆன எங்கள் போராட்ட வரலாற்றின் செயலிடம் இது. இந்த மண்ணில் இருந்து சத்தியமும் நேர்மையுங் கொண்ட எமது அரசியல் பயணத்தைப் பற்றி பேசுவதிலும் அதில் என்னைப் பலப்படுத்திய உங்களுக்கு நன்றி தெரிவிப்பதிலும் நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு இங்கு தழைத்தோங்க வாழ்த்தி விடைபெறுகின்றேன். – என்றார்.

# கப்பலில் ஏற்பட்ட தீ விபத்துக் குறித்து விசாரிக்க வெளிநாட்டு நிபுணர்கள் குழு

கொழும்பு,செப். 07

அம்பாறை, சங்கமன்கண்டி கடற்பரப்பில் வைத்து 'நியூ டயமன்ட்' என்ற கப்பல் தீ விபத்துக்கு உள்ளாகியமை குறித்து விசாரணை மேற்கொள்வதற்கு நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பத்து நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றே விசாரணை மேற்கொள்வதற்கு நேற்று குறித்த பகுதிக்கு வருகை தர இருந்தது.

கப்பலை சொந்தமாகக் கொண்ட நிறுவனத்தின் தலையீட்டால் பிரிட்டிஷ் மற்றும் டச்சு நிபுணர்களின் குழு நேற்று மத்தள சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தர இருந்ததாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

மேலும், கப்பலை கடல் பகுதிக்கு கொண்டுசெல்ல கல்முனையில் இருந்து ஒரு ஸ்பீட் படகைப் பயன்படுத்த கடற்படை திட்டமிட்டுள்ளது.

இலங்கைக்கடற்படையுடன்இணைந்து பணியாற்றுவதற்காக நேற்றுமுன்தினம் பிற்பகல் முதல் மேலும் இரண்டு இந்திய கப்பல்கள்இப்பகுதிக்கு வருகைதந்துள்ளன.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் இருந்து 30 கடல் மைல் தூரத்தில் இந்த கப்பல் விபத்துக்கு உள்ளாகியிருந்தது. இந்நிலையில் இலங்கை பாதுகாப்புத் தரப்பு, இந்திய தரப்புக்களின் தீவிர போராட்டத்துக்கு மத்தியில் தீப்பரவல் கட்டுப் படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த சூழலில் ALP Winger டக் என்ற படகு, விபத்துக்குள்ளான கப்பலை 40 கடல் மைல் (சுமார் 74 கி.மீ) வரை ஆழ் கடலுக்கு கொண்டு சென்று நிறுத்தியுள்ளது.

இதேவேளை, ஆழ்கடல் காற்று காரணமாக அவ்வப்போது தீ விபத்து ஏற்படும் அபாயம் உள்ளாவதாக தெரிவிக்கப்படுவதுடன் அது டக் படகுகள் மற்றும் இந்திய கடலோர காவல்படை கப்பல்களால் கட்டுப்படுத்தப்படுவதாகவும் இதற்காக ஹெலிக்கொப்டர்களும் பயன்படுத்தப் படுகின்றன எனவும் குறிப்பிடப்படுகிறது.



இதன்படி, இலங்கை கடற்படைக்குச் சொந்தமான மூன்று மற்றும் மூன்று துரித தாக்குதல் கப்பல்கள், இலங்கை கடலோர காவல்படைக்குச் சொந்தமான இரண்டு கப்பல்கள், இந்திய கடலோர காவல் படைக்குச் சொந்தமான மூன்று கப்பல்கள், இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஒரு கப்பல், ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகக் குழுவின் இராவணா மற்றும் வசம்பட்க் படகுகள், பாதிக்கப்பட்டுள்ள கப்பலின் வெளிநாட்டு நிறுவனம் தயாரித்த ALP Winger டக் படகு, ஆழ்கடல் தீயணைப்பு வீரர்கள் கொண்ட டி.டி.டி-1 (TTT One) டக்படகு ஆகிய இந்ததீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

அதேபோல், இலங்கை விமானப் படையின் எம்.ஐ. 17 ஹெலிக்காப்டர் மற்றும் பீச் கிராஃப்ட் ஆகியவை இந்த நிவாரண நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் விபத்து



கிளிநொச்சி, செப். 07

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கு அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு வேகக் கட்டுப் பாட்டை இழந்த கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளான தில் காரின் சாரதி காயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி ஏ-9 வீதியின் கிளிநொச்சி நகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கார் ஒன்று வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின்போது காரின் சாரதி காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். இவ்வாறு காரை செலுத்திச் சென்ற நபர் பளை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி எனவும் அவர் அச்சமயம் மது போதையில் இருந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## வாள்வெட்டுக்காரர் ஐவர் தப்பினர் அவர்களைத் தேடுகிறது பொலிஸ்

வாள்வெட்டு, கொள்ளை போன்ற சமூக விரோத செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் மூவரை அச்சுவேலி பொலிஸார் கைது செய்துள்ளனர். தப்பிச் சென்ற 5 பேரையும் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

புத்தூர் – சிறுப்பிட்டியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. வாள்வெட்டுச் சம்பவத் துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் 8 பேர் கொண்ட கும்பல் வாள்களுடன் சிறுப்பிட்டியில் இருந்து புத்தூர் கலைமதி வீதி ஊடாக மோட்டார் சைக்களில் வந்தனர்.

அச்சமயம் இவர்களை அப்பகுதி இளைஞர்கள் மடக்கிப் பிடித்து அச்சுவேலி பொலிஸில் ஒப்படைத்தனர். மற்றவர்கள் தப்பி ஓடிய நிலையில், மூவரை அச்சுவேலி பொலிஸார் கைது செய்தனர். இந்நிலையில் தப்பிச் சென்ற 5 பேரையும் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

புத்தூர் – ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் இவர்களுக்குத் தொடர்பு இருக்கலாம் என்ற ரீதியில் இந்தக் குழுவினரிடம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## 20ஆவது திருத்தத்துக்கு எதிரணித் தரப்பில் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு?

எதிர்க்கட்சியை சேர்ந்த ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிக்க உள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இரு பிரிவை சேர்ந்த ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் 20 ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்படும்போது, அதற்கு ஆதரவளிப்பர் என உறுதியளித்திருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

அரசாங்கத்தின் முக்கிய பிரமுகரிடம் அவர்கள் இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட சிறுபான்மை கட்சிகள், அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்திவருகின்றன.

அதாவது, தனிநபருக்கு நிறைவேற்று அதிகாரம் தடையின்றி முழுமையாக கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக மாத்திரமே குறித்த 20ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என இந்தக் கட்சிகள் தொடர்ந்து கூறி வருகின்றன.

இந்நிலையில் எதிர்க்கட்சியை சேர்ந்த ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறுத்தை குட்டியொன்று நேற்று உயிருடன் மீட்பு

### மஸ்கெலியா தேயிலைத் தோட்டத்தில்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஸ்கெலியா அப்புகஸ் தென்ன மேல் பிரிவு தோட்டத்தில் சிறுத்தை குட்டியொன்று நேற்று முன்தினம் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



தேயிலை மலையில் கொழுந்து பறித்து கொண்டிருந்தவர்கள் சிறுத்தை குட்டியைக் கண்டு பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர். பொலிஸார் வன பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவித்தமைமையடுத்து நல்ல தண்ணீர் வன இலாக்க அதிகாரிகள் வருகை தந்து குறித்த சிறுத்தை குட்டியை மீட்டுக் கொண்டு சென்றுள்ளனர். இச்சிறுத்தைக் குட்டி சுமார் மூன்று, நான்கு மாதங்கள் நிரம்பியது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக தேயிலை தோட்டங்கள் காடுகளாக மாறி வருவதனாலும், அங்கு இலகுவாக கொடிய வனவிலங்குகளுக்கு உணவு கிடைப்பதனாலும், அப்பகுதிகளை சிறுத்தைகள் தமது வாழ்விடங்களாக மாற்றிக்கொண்டுள்ளன.

மக்கள் நடமாடும் இடங்களில் சிறுத்தைகள் நடமாடுவதனால் பொதுமக்களின் உயிர்களுக்கும் சிறுத்தை இனத்தின் உயிருக்கும் ஆபத்தான நிலை உருவாகியுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## பதுளை குளத்தில் ஆணின் சடலம்

பதுளை தெமோதரை சௌதம் தோட்டம் மேற்பிரிவில் (5ஆம் கட்டையில்) அமைந்துள்ள குளத்தில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் இன்று அதிகாலை குளத்தில் மிதப்பதைக் கண்டு பிரதேச மக்களால் எல்ல பொலிஸாருக்கு தெரியபடுத்தியதையடுத்து சடலம் எல்ல பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது

குறித்த சடலம் சௌதம் மேற்பிரிவை சேர்ந்த 74 வயதையுடைய பெரியம் மன்பெரியான் என எல்ல பொலிஸார் தெரிவித்தனர். பிரேத பரிசோதனைக்காக சடலம் பதுளை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பபட்டது.

## பயங்கரவாதத்துடன் தொடர்புடைய கைதிகளுக்கு தங்காலையில் சிறை

பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்களை தடுத்து வைப்பதற்குரிய நிலையமாக தங்காலை பழைய சிறைச்சாலை பயன்படுத்தப்படவுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவிப்பு கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

1982 ஆண்டு இலக்கம் 10 இன் கீழான பயங்கரவாதத்தை தடுக்கும் (தற்காலிக விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய 1979 ஆண்டு இலக்கம் 48 இன் கீழ் பயங்கரவாதத்தை தடுக்கும் (தற்காலிக) ஒழுங்கு விதிகள் சட்டத்தின் 15 ஆவது சரத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக அந்த சரத்தில் கூறப்பட்டுள்ள பணிகளுக்காக – தங்காலை பழைய சிறைச்சாலையை பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்களை தடுத்து வைக்கும் இடமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவிற்கு அமைய, பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன, இதற்குரிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

# '13' நீக்கப்படக் கூடாது இந்தியா அதில் உறுதி!

## அந்நாட்டு தூதரின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார் பேச்சாளர்

கொழும்பு, செப்ரெம்பர் 06

13ஆவது திருத்தம் நடைமுறையில் இருக்க வேண்டும் என்பதில் இந்திய தூதுவர் உறுதியாகவுள்ளார் என அவரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் 19 ஆவது திருத்தம் ஆகியவற்றில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக அரசில் ஒரு தரப்பினர் கூறி வருகின்றனர்.

அதேபோன்று அரசில் இன்னொரு தரப்பினர், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நீக்குதவதே நாட்டின் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தரும் என வலியுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிறுபான்மைக்கட்சிகள் அரசின் இத்த கைய கருத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

அதாவது, 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி, 20ஆவது திருத்தம் கொண்டுவரப் படுமாயின் முழு அதிகாரம் ஒருவரின் கீழ் குவிக்கப்படும். இது சர்வதிகார போக்கிற்கு வித்திடுமென எச்சரிக்கை விடுத்துள்ளன.

மேலும், இந்தியா 13ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு நிச்சயம் எதிர்ப்பை வெளியிடுமெனவும் சிறுபான்மைக் கட்சிகள் கூறி இருந்தன.

இந்நிலையிலேயே, 13ஆவது திருத்தம் தொடர்பில் இந்தியத் தூதுவரின் நிலைப்பாட் டில் மாற்றமில்லை என இந்திய தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கம் மற்றும் சமாதானம் தொடர்பாக இந்தியா கொண்டுள்ள நீண்ட கால நிலைப்பாட்டை



யும் 13ஆவது திருத் தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதையும் இந்தியத் தூதுவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார் எனவும் அவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

# டிப்பர் – மோ.சைக்கிள் மோதி பெண் ஒருவர் உயிரிழப்பு!

## தனங்கிளப்பில் இன்று துயரம்



சாவகச்சேரி, செப். 06

டிப்பர் - மோட்டர்சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்

தனங்கிளப்புச் சந்தியில் இருந்து சங்குப்பிட்டி செல்லும் வீதியில் இந்த விபத்து இன்று முற்பகல் 11.45 மணியளவில் இடம்பெற்றது.

சாவகச்சேரி திசையிலிருந்து பூநகரி திசை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் எதிர்த் திசையில் வந்த டிப்பருமே மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றது. உயிரிழந்த பெண் அடை யாளம் காணப்பட வில்லை. அவர் ஒரு காலையிழந்த நிலையில் செயற்கை கால் பொருத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நூறு ஜோடிகள் அ'புரத்தில் கைது

வயது குறைந்த நூறு ஜோடிகள் அநுரா தபுர பொலிஸ் பிரிவில் வைத்து கைது செய் யப்பட்டுள்ளனர்.

அநுராதபுர புனித பூமியில் மோசமாக நடந்து கொண்ட குற்றச்சாட்டின் பேரில் இவர் கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள் ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# காற்றின் வேகம் அதிகரிப்பு

கொழும்பு, செப். 06

நாடு முழுவதும் எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு காற்றின் வேகம் மணிக்கு 50 - 60 கிலோ மீற்றர் வரை அதிகரித்துக் காணப்படலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன் நாட்டைச் சூழவுள்ள ஆழமற்ற மற்றும் ஆழமான கடல் பகுதியில் காற்றின் வேகம் மணிக்கு 70 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. அதனால் கடல் கொந்தளிப்பாக காணப்படலாம் எனவும் திணைக்களம் அவித்துள்ளது.

நாட்டில் தற்போது காணப்படும் மழையுடனான வானிலையில் இன்றும் அதிகரிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வட மேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களி லும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக் கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாடு முழுவதும் காற்றின் வேகமா னது மணித்தியாலத்துக்கு 50 -60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின் னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறி வுறுத்தப்படுகின்றார்கள் என்றும் வளிமண்டளவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# புதிய அரசமைப்பு எவ்வாறு அமையும்? 12 சரத்துகள் தவிர ஏனையவை 'அவுட்'

## வெளியானது தகவல்

கொழும்பு, செப். 06

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பில் 12 அத்தியாயங்களில் உள்ள சரத்துகளைத் தவிர ஏனைய அனைத்து விடயங்களும் புதிய அரசமைப்பின் ஊடாக மாற்றியமைக்கப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது.

புதிய அரசமைப்பை இயற்றுவதற் காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழு உறுப்பினர் ஒருவரை மேற்கோள் காட்டி சிங்கள வார இதழான 'மௌபிம' இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. இதன்படி பௌத்த மதம், தேசிய கீதம், தேசியக் கொடி மற்றும் நாட்டின் ஒருமைப்பாடு ஆகியவற்றில் தாக்கம் செலுத்தக்கூடிய 12 சரத்துகளில் எவ்வித மாற்றமும் வராது எனவும், ஏனைய சரத்துகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கோ அல்லது நீக்குவ தற்கோ நாடாளுமன்றத்தில் மூன்றி லிரண்டு பங்கு பெரும்பான்மைப் பலம் போதும் என்பதால் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டிய தேவை ஏற்படாது எனவும் அந்த நிபு ணர் குறிப்பிட்டார் என குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை 21ஆவது திருத்தச் சட்டமாகக் கருதாமல் புதிய அரசமைப்பாகவே அடையாளப்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் நிபுணர் குழு கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடவுள்ளது.

புதிய அரசமைப்பை எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் இயற்ற முடியும் எனவும், அதனை 2021 ஜனவரியில் அரசிடம் கையளிக்கக் கூடியதாக இருக்கும் என எதிர்ப்பார்ப்பதாகவும் குறித்த நிபுணர் கருத்து வெளியிட்டுள்ளார். அத்துடன், பல்துறையினரிடமும் புதிய அரசமைப்பு குறித்து கருத்துக்கள், ஆலோசனைகள் உள்வாங்கப்படவுள்ளன.

# ஓமந்தை பாலமோட்டையில் நேற்று 2 கிலோ கஞ்சாவுடன் பெண் கைது

வவுனியா, செப். 06

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமோட்டை மூன்று முறிப்பு பகுதியில் இரண்டு கிலோ கேரளா கஞ்சாவுடன் பெண் ஒருவரை நேற்று மாலை ஓமந்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஓமந்தை விசேட பொலிஸ் குழுவினர் வழங்கிய தகவலின் அடிப்ப டையில் ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுரேஷ் டி சில்வாவின் வழிகாட்டலில் ஓமந்தை பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் அருளானந்தம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஓமந்தை பாலமோட்டை பகுதியில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது மாட்டார் சைக்கிளின் கீழ் பகுதியில் இரண்டு கிலோ கேரளா கஞ்சாவினை கொண்டு சென்ற பெண்ணை கைது செய்துள்ளமையுடன் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கேரளா கஞ்சாவினை வைத்திருந்த குற்றச்சாட்டில் நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய பெண் ஒருவர் கைது செய் யப்பட்டார். கைது செய்யப்பட்ட பெண்ணை நீதிமன்ற அனுமதியுடன் ஏழு நாள்கள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விஜயகலாவுக்கு அழைப்பாணை

கொழும்பு, செப். 06

அரசியல் பாதிப்புக்குள்ளான சம்பவங்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் முன்னிலையாகுமாறு முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் 2015ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி யின் சார்பில் போட்டியிட்ட குமார் சர்வானந்தா ஆகியோருக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி அவர்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸில் பணியாற்றிய பொலிஸாரான ஞானலிங்கம் மயூரன் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த இருவரையும் விசாரணைக்கு அழைக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழு முன் நேற்று சாட்சியம் அளித்த ஞானலிங்கம் மயூரன், சிவலோகநாதன் வித்யாவின் கொலை மற்றும் பாலியல் பலாத்காரத்தின் முக்கிய சந்தேக நபரான மகாலிங்கம் சசிகுமார் அல்லது சுவிஸ் குமாரை விடுவிப்பதில் முன்னாள் அமைச்சர் விஜயகலா நேரடியாக த் தலையிட்டார் எனச் சாட்சியமளித்திருந்தார். அத்துடன் கைதி ஒருவர் தப்பி யோடிய சம்பவத்தின் பின்னர் தாம் உட்பட 5 பொலிஸார் தடுத்துவைக்கப்பட்ட தன் பின்னணியின் விஜயகலா மகேஸ்வரன் இருந்திருக்கலாம் என்றும் ஞானலிங்கம் மயூரன் ஆணைக்குழுவில் சாட்சிய மளித்திருந்தார்.



# தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளை ஒரு பொது நிலைப்பாட்டுக்கு கொண்டு வர முயல வேண்டும்

## வலியுறுத்துகின்றார் சிறீகாந்தா

**தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரன் அவர்களுக்கு கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான தமிழ்த் தேசியக் கட்சியினால் யாழ் நகரில் நேற்று சனிக்கிழமை மாலை அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் அக்கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிறீகாந்தா ஆற்றிய உரையிலிருந்து ......**

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் புதிய அரசாங்கம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில்ஆட்சிபீடத்தில்அமர்த்தப்பட்டிருக்கின்றது.

பௌத்த,சிங்கள வாக்குகளே தங்களை ஆட்சியில் அமர்த்தின என அரசாங்கத் தலைவர்கள் கூறி வருகின்றமையை அனைவரும் அறிவர்.

சுதந்திர இலங்கைத்தீவின் வரலாற்றில்,கடந்த காலத்தில் சில சந்தர்ப்பங்களில், பாரிய ஆதரவுடன் அரசாங்கங்கள் பதவிக்கு வந்திருக்கின்றன.

1956 இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாவிட்டாலும், பண்டார நாயக்கா தலைமையில் போதுமான அறுதிப் பெரும்பான்மையோடும், இருபத்து நான்கு மணி நேரத்தில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி ஆக்கப்படும் என்ற இனவெறிக் கோத்தோடும் ஒரு அரசாங்கம்சிங்களமக்களால்ஆட்சியில்அமர்த்தப்பட்டது.

அடுத்த இரண்டாண்டு காலத்தில்,அதுவரை இலங்கையின் வரலாறு காணாத இனவெறித் தாக்குதல்களை தமிழ் மக்கள் சந்தித்தார்கள்.

பின்னர் 1970 இல், பண்டார நாயக்கா அவர்களின் விதவை மனைவி சிறிமா பண்டார நாயக்கா தலைமையில், இடதுசாரிக்கட்சிகளையும் உள்ளடக்கிய ஒரு கூட்டு அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பதவியில் அமர்த்தப்பட்டது.

அந்த அரசாங்கம் ஓர் புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கி இலங்கையை குடியரசாகப் பிரகடனப்படுத்தியது.

சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்பதும் பௌத்தமே அரசாங்க மதம் என்பதும் அரசியல் சாசனத்தினூடாக உறுதிப்படுத்தப்பட்டது.

இதன் விளைவாக, தமிழினத்தின் அரசியல் விடுதலைக்காக,தீவிரவாத அரசியல் சிந்தனை கொண்ட இளைஞர்களால் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அங்கும் இங்குமாக நிகழ்ந்த சில வன்முறைச் சம்பவங்களோடு மட்டுமே அந்த ஆயுதப் போராட்டம் அமைந்திருந்தது.

இந்த நிலையில்,1977இல் நிகழ்ந்த பொதுத் தேர்தலில்,ஜனநாயகத்தின் பாதுகாவலன் என்ற தோற்றப்பாட்டோடு அன்றைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தானா நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வந்தார்.

அவரின் அரசாங்கம், பதவிக்கு வந்து ஒரு வருடத்திற்குள் ஒரு புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கியது.

அதற்கு முந்திய அரசியல் சாசனத்தை அடியொற்றி வந்த இந்தப் புதிய அரசியல் சாசனமும்,சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தும் விதத்திலேயே அமைந்திருந்தது.

இந்த அரசியல் சூழ்நிலையில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் வலுப்பெறஆரம்பித்த போது, அதை அடக்கி அழிப்பதற்காக 1979ல் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

மூன்று வருடங்களுக்கு மாத்திரமே அந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்ற காலக் கட்டுப்பாட்டு ஏற்பாட்டை முன்வைத்த ஜனாதிபதி ஜெயவர்த்தன, அதனூடாக,18 எம்.பிக் களோடு அப்போதைய நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாக, அமிர்தலிங்கம் அவர்களின் தலைமையில் இயங்கிய அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணி, இந்த சட்டம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது சபையில் இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்தியிருந்தார்.

எட்டு எம்.பிக்களோடு நாடாளுமன்றத்தில் இருந்த ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவடைந்திருந்த நிலையில்,மைத்திரிபால சேனநாயக்கா தலைமையில் செயற்பட்ட,அதன் ஒரு பிரிவைச் சேர்ந்த சில எம்.பிக்கள் மாத்திரமே பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக வாக்களித்தார்கள்.

பயங்கரவாத சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த மூன்று வருட காலம் முடிவடையும் தறுவாயில்,ஜனாதிபதி ஜெயவர்த்தன சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்து, அந்தக் கால எல்லையை நீக்கி, பயங்கரவாதத் தடைச்சட்டம் சட்டப்புத்தகத்தில் நிரந்தரமாக இடம்பெறுவதை உறுதிப்படுத்தினார்.

இந்த அரசியல் பின்னணியில்,ஆயுதப் போராட்டம் மேலும் தீவிரமடைந்த நிலையில், 1983 ஆடி மாதத்தில் தமிழ் இனத்திற்கு எதிரான வன்முறை அரசாங்கத்தின் ஆதரவுடன் பாரிய அளவில் நிகழ்த்தப்பட்டது.

இந்த வெறியாட்டத்தில் வெலிக்கடைச் சிறையில் 53 தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டார்கள். அப்போது சின்னஞ்சிறிய இலங்கைத் தீவை வெளி உலகம் திரும்பிப் பார்த்தது. அண்டை நாடான இந்தியாவின் தலையீடு இலங்கைத் தமிழர் பிரச்சனையில் நேரடியாகவே மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலை போராட்ட இயக்கங்களுக்குமிடையில் பெரும் போர் மூண்டது.

சிற்சில இடைவேளைகளோடும், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் குறுக்கீட்டிற்கு நடுவிலும், இந்தப்போர் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடி மோதலாக மாறி, தொடர்ந்து நீடித்து, 2009 வைகாசி மாதத்தில் முற்றுப் பெற்றது.

யுத்தம் முடிவுக்கு வந்து பதினொரு வருடங்கள் பறந்தோடி விட்ட நிலையிலும் இலங்கைத் தீவின் இனப் பிரச்சனைக்கு இன்னமும் தீர்வில்லை. இந்த நிலையில் தான் மஹிந்த ராஜபக்ஷவின் புதிய அரசாங்கம் பதவி ஏற்றிருக்கின்றது.

225 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில் எதிர்த்தரப்பில் 75 எம் பிக்கள். இவர்களில் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள் 54 பேர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி எனத் தமிழ் தேசியம் சார்ந்த மூன்று வெவ்வேறு அரசியல் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் மொத்தம் 13 பேர். மூன்று பேர் ஜே.வி.பி. உறுப்பினர்கள். எஞ்சியுள்ள மூவரில் ஒருவர்,முஸ்லிம் காங்கிரஸ் சின்னத்தில் போட்டியிட்டு வென்றவர். இன்னொருவர் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றின் சார்பில் புத்தளம் மாவட்டத்திலிருந்து வெற்றியீட்டியவர்.மற்றவர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ரிஷாத் பதியுதீன்.

> புதிய அரசியல் சாசனத்தில் நீதி கிடைக்கவில்லை யெனில், எமது பிரச்சினையை அடுத்த களத்திற்கு நகர்த்த வேண்டியிருக்கும். அது நிச்சயமாக சர்வதேச அரங்கமே!

தேசியப் பட்டியல் மூலம் இன்னமும் நிரப்பப்படாமலிருக்கும் இரண்டு ஆசனங்களில் ஒன்று ஐக்கிய தேசிய கட்சிக்குரியது.மற்றது சிங்கள பௌத்த தீவிரவாதக் கட்சி ஒன்றுக்கு உரியது.

அரசாங்கத் தரப்பை பொறுத்தமட்டில்,அதன் 150 உறுப்பினர்களில் சபாநாயகரைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால், 149எம் பி க்கள் இருக்கின்றார்கள். இவர்களில் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியிலிருந்து இருவர், மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தனையும் சேர்த்து, மூவர்.

இவர்களைவிட,மட்டக்களப்பிலிருந்து வெற்றியீட்டிய பொது ஜனப் பெரமுன உறுப்பினர் வியாழேந்திரனும், அவரைப்போலவே யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கும் அங்கஜனும் உள்ளனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மூவர் மலையகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள்

இந்த மொத்தம் 8 தமிழ் எம் பிக்கள் அனைவரையும் சேர்த்துத்தான் அரசாங்கக் கட்சியிடம் 149 எம் பிக் கள் உள்ளார்கள்.

இந்த நிலையில் புதிய அரசியல் சாசனத்தை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையான150எம்.பிக்கள்என்றஎண்ணிக்கையைப் பொறுத்தமட்டில், அரசாங்கத்துக்கு ஆதரவான இந்த எட்டுத் தமிழ் எம்.பிக்களின் எண்ணிக்கை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இதேவேளையில்,எதிர்த்தரப்பான ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியில் ஆறு தமிழ் எம்.பிக்கள் உள்ளனர் என்பதும் அதேபோல முக்கியமானது.

ஒரு புதிய அரசியல் சாசனம் வரையப்படவுள்ள வரலாற்று முக்கியத்துவம் மிக்க காலகட்டத்தில்,எமது நீண்ட கால அரசியல் நிலைப்பாடுகளை வலியுறுத்தும் அதே நேரத்தில், யதார்த்தங்களை மனதில் நிறுத்தி ஆக்கபூர்வமான ஓர் அணுகுமுறையை வகுத்து, அரசியல் மற்றும் இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக எமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்க ,சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் நாம் எடுத்தாக வேண்டும்.

இதன் முதற்கட்டமாகவும், முதற் படியாகவும்,மூன்று அணிகளாகப் பிரிந்து நிற்கும் தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளை ஒரு பொது நிலைப்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு நாம் விரைவாகவும் வேகமாகவும் முயற்சிக்க வேண்டும்.

பொறுமையோடும் விவேகத்தோடும் முயன்றால் அது சாத்தியமாகும் என்றே நாம் நம்புகிறோம்.

அடுத்தாக, இந்தப் பொது நிலைப்பாட்டுக்கு, நாடாளுமன்றத்தில் எதிர்த் தரப்பிலும் ஆளுங்கட்சி வரிசைகளிலும் அமர்ந்திருக்கும் தமிழ் உறுப்பினர்களின் ஆதரவை பெறுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

இது ஒன்றும் சுலபமானது அல்ல. குறிப்பாக, ஆளுங் கட்சி வரிசைகளில் அமர்ந்திருக்கும் தமிழ் உறுப்பினர்களின் ஆதரவை பெறுவதில்,யதார்த்த ரீதியாக,பல்வேறு கஷ்டங்களும் நடைமுறைச் சிக்கல்களும் உள்ளன. அவர்களில் பலர் வெவ்வேறு பதவிப் பொறுப்புகளில் அமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதை நாம் ஒரு போதும் மறந்து விட முடியாது. அதற்காக நாம் மனம் தளர வேண்டியதுமில்லை.

எது எப்படி இருந்தாலும்,புதிய அரசியல் சாசன விவகாரம்தொடர்பில்எம்இனத்தின்நீதியானகோரிக்கைகளை முன் வைத்து நாம் செயற்பட்டேயாக வேண்டும். இது கட்டாயமானது. தவிர்க்கப்படமுடியாதது.

புதிய அரசியல் சாசனத்தில் நீதி கிடைக்கவில்லையெனில்,எமது பிரச்சினையை அடுத்த களத்திற்கு நகர்த்த வேண்டியிருக்கும். அது நிச்சயமாக சர்வதேச அரங்கமே!

எமது பிரச்சினையில்,சர்வதேச அரங்கில் பல நாடுகளின் ஆதரவு அல்லது அனுதாபம் எம் தரப்புக்கு தொடர்ந்து கிடைத்தவண்ணமே உள்ளது.

ஒரு கதவு அடைக்கப்படும் போது இன்னொரு கதவு திறந்து கொள்கிறது என்கிற பொன்மொழியினை நாம் நினைவில் கொள்வது நல்லது. - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஈரானில் லொறியில் காஸ் சிலிண்டர்கள் திடீரென வெடித்ததில் 217 பேர் காயம்!



தெஹ்ரான்,செப்.07

ஈரானில் லொறியில் எடுத்துச் செல்லப்பட்ட காஸ் சிலிண்டர்கள் வெடித்து 217 பேர் படுகாயமடைந்தனர்.

ஈரானின் மேற்கு பகுதியில் உள்ள இலம் மாகாணத்தில் இருந்து குளோரின் காஸ் சிலிண்டர்களை ஏற்றிக்கொண்டு ஈராக்குக்கு கென்டெய்னர் லொறி ஒன்று புறப்பட்டது. இந்த லொறி வெள்ளியன்று இரவு இலம் மாகாணத்தில் உள்ள சஞ்ஜிரா என்ற கிராமத்துக்கு அருகே நின்று கொண்டிருந்த போது கென்டெய்னரில் இருந்த காஸ் சிலிண்டர்கள் திடீரென வெடித்துச் சிதறின. அடுத்தடுத்து காஸ் சிலிண்டர்கள் வெடித்து சிதறியதில் கென்டெய்னர் லொறி தீப்பற்றி கொழுந்து விட்டு எரிந்தது. இதில் அந்த பகுதியில் கரும் புகை மண்டலம் உருவானது. கென்டெய்னர் லொறி நிறுத்தப்பட்டிருந்த சாலையில் சென்று கொண்டிருந்த பலர் இந்த விபத்தில் சிக்கிப் படுகாயம் அடைந்தனர்.

மேலும் சிலிண்டர்களில் இருந்து கசிந்த குளோரின் வாயு காற்றில் கலந்தது. இதை சுவாசித்த மக்களுக்கு மூச்சுத்திணறல் உள்ளிட்ட பாதிப்புக்கள் ஏற்பட்டன. தீ விபத்தில் படுகாயம் அடைந்தவர்கள் மற்றும் காஸ் கசிவால் சுவாச பிரச்சினைக்கு ஆளானவர்கள் என 217 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். லொறி டிரைவரின் அலட்சியத்தால் அந்த விபத்து நடந்ததாகக் கூறப்படுகிறது. எனவே பொலிஸார் லொறிச் சாரதியைக் கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கொரோனாத் தடுப்பூசி எல்லா நாடுகளுக்கும் கிடைப்பது கட்டாயம்

## ஐ.நா. சபைத் தலைவர் வலியுறுத்து



நியூயோர்க்,செப்.07

கொரோனா தடுப்பூசி எல்லா நாடுகளுக்கும் கிடைக்க வேண்டும் என்று ஐ.நா. சபையின் தலைவர் திஜ்ஜானி முகமது பாண்டே வலியுறுத்தி உள்ளார்.

கொரோனா நோய்த்தொற்றை ஒழிக்க தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சியில் அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் மும்முரமாக ஈடுபட்டு உள்ளன. தடுப்பூசிகளை மனிதர்களுக்கு செலுத்தி பார்க்கும் சோதனை நடைபெற்று வருகிறது. இதனால் தடுப்பூசிகள் விரைவில் மக்களின் பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 193 உறுப்பு நாடுகளின் தூதர்கள் கலந்து கொண்ட கூட்டம் பொதுச்சபை அரங்கில் நடைபெற்றது. இதையொட்டி ஐ.நா.சபையின் தலைவர் திஜ்ஜானி முகமது பாண்டே பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:–

வளரும் நாடுகளில் சுகாதார திட்டங்கள் மோசமாக இருப்பதால் கொரோனா தொற்றால் அந்த நாடுகள்தான் பெரிதும் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முன்னேறிய நாடுகளை விட வளரும் நாடுகளில்தான் கொரோனா பாதிப்பும், உயிரிழப்பும் குறைவாக உள்ளது. பணக்கார நாடாக இருந்தாலும் சரி; ஏழை நாடாக இருந்தாலும் நோய்த் தொற்றை எப்படி எதிர்கொள்கின்றன என்பதை பொறுத்துதான் பாதிப்புக்கள் அமைகின்றன.

பணக்கார நாடுகளில் சிறந்த சுகாதார வசதிகளும், நிதி ஆதாரங்களும் உள்ளன. ஆனால் பெரும்பாலான வளரும் நாடுகள் சுற்றுலா தொழிலையும், எண்ணெய் வளத்தையுமே நம்பி இருக்கின்றன. அந்த நாடுகள் பொருளாதார ரீதியில் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கின்றன.

கொரோனா தொற்று சர்வதேச சமுதாயத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. எனவே அதற்கு விரைவில் முடிவு கட்ட வேண்டும். உலகம் விரைவில் இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும்.

கொரோனாவுக்கான தடுப்பூசியை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்தத் தடுப்பூசி பயன்பாட்டுக்கு வந்ததும் எல்லா நாடுகளில் உள்ள மக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். இது மிகவும் முக்கியமாகும்.

ஏதாவது ஒரு நாட்டுக்கு கிடைக்காமல் போனாலும் கொரோனாவின் அச்சுறுத்தலை இந்த உலகம் தொடர்ந்து சந்திக்க வேண்டி இருக்கும். ஏழ்மை நிலையில் உள்ள நாடுகளுக்கு கிடைக்காமல் போனால் அந்த நாடுகள் மேலும் பாதிப்புக்கு உள்ளாகும்.

எனவே தடுப்பூசி தயாரிக்கும் நாடுகள் அனைத்து நாட்டு மக்களுக்கும் அது கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்படவேண்டும். இது தொடர்பான நடைமுறைகளும், உடன்பாடுகளும் உருவாக்கப்படும் என்று நம்புகிறேன்.

– இவ்வாறு அவர் கூறினார்.

# பாகிஸ்தானுக்கு இலங்கை வழங்கிய யானை உடல், மன நலப் பாதிப்புடன்!

## இனி, கம்போடியாவில் உள்ள சரணாலயத்துக்கு



பாகிஸ்தான், இஸ்லாமாபாத் மிருகக்காட்சி சாலையில் கடுமையாக உடல் மற்றும் மன நலம் பாதிக்கப்பட்டுள்ள ஒற்றை யானையை கம்போடியாவுக்கு இடம் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர், ஃபோர் பாவ்ஸ் (FOUR PAWS EXPERTS) தன்னார்வலர்கள். இதையொட்டி, யானையுடன் நட்பை உருவாக்கும் முயற்சியில் கால்நடை மருத்துவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

யானைகளே இல்லாத பாகிஸ்தான் நாட்டுக்கு 1985 ஆம் ஆண்டு ஒரு வயதான காவன் எனும் யானையை அன்பளிப்பாக வழங்கியது இலங்கை நாடு. பிறகு காவனுக்குத் துணையாக 1990 இல் சஹேலி எனும் பெண் யானையை வழங்கியது. இரண்டு யானைகளும் இஸ்லாமாபாத் மிருகக் காட்சி சாலையில் வளர்ந்து வந்த நிலையில் 2012 ஆம் ஆண்டு சஹேலி யானை உயிரிழந்தது.

அதற்குப் பிறகு மிகச்சிறிய கொட்டகையில் தனிமையில் வாழ்ந்தது காவன் யானை. பொதுவாக யானைகள் மிதவெப்பநிலையில் வாழ்பவை. ஆனால், பாகிஸ்தானில் நிலவும் அதிவெப்பநிலையால் காவன் யானையின் உடல்நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டுவாக்கில் காவன் மூர்க்கத்தனத்துடன் இருந்ததால், அதை சங்கிலியில் கட்டி வைத்தனர். அப்போது, தனிமை காரணமாக விரக்தி தாங்க முடியாமல் காவன் யானை சுவரில் தலையை முட்டிக்கொண்டு நிற்பது போன்ற படம் வெளியாகி உலகில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்தப் படத்தால் உருவான அதிர்வலையால் காவன் யானையை விடுவிக்க வேண்டும் என்ற குரல் உலகம் முழுவதும் எழுந்தது. புகழ்பெற்ற பொப் பாடகியான செர் கூட காவன் யானையை விடுவிக்க வேண்டும் அல்லது காவன் யானைக்குத் துணையாகப் பெண் யானையை அனுப்ப வேண்டும் என்று குரல்கொடுத்தார். இது தொடர்பாக, பாகிஸ்தான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் யானையை விடுவித்து விடலாம் என கடந்த மே மாதத்தில் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதையடுத்து, காவன் யானையை கம்போடியாவில் உள்ள சரணாலயத்துக்கு மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். சோர்வடைந்து காணப்படும் யானையை பாடல்கள் வழியாக உற்சாகமான மன நிலைக்கு கொண்டு வரவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# வடகொரியாவில் ஏழை மக்கள் பூச்சிகளையே உண்கின்றனர்!

## அங்கிருந்து தப்பிய பெண் அதிர்ச்சித் தகவல்

வடகொரியாவில் கிம் ஜாங் ஆட்சியின் கீழ் அப்பாவி மக்கள் படும் கொடுமைகளை அங்கிருந்து வெளியேறி வெளிநாட்டில் வசிக்கும் இளம்பெண் ஒருவர் அம்பலப்படுத்தியுள்ளார்.

வடகொரியாவில் பிறந்த யியோன்மி பார்க் என்பவர், அங்கிருந்து வெளியேறி தற்போது, அமெரிக்காவில் வசித்து வருகிறார். வடகொரியாவில் அன்றாடம் கூலி வேலை செய்து பிழைக்கும் பெருவாரியான மக்கள் சத்தான உணவுக்காக பூச்சிகளையே சாப்பிட்டு வருவதாக கூறும் பார்க், வடகொரியாவில் இருந்து தமது 13 ஆவது வயதில் வெளியேறும் வரை தாமும் பூச்சிகளைச் சாப்பிட்டனர் எனக் கூறுகிறார்.

பொதுவாக சேரிப்பகுதிகள் போன்றே வடகொரியத் தெருக்கள் காணப்படுகின்றன எனக் கூறும் பார்க், தெருக்களில் கேட்பாரற்று சடலங்கள் கிடப்பதையும் தாம் அந்த சிறு வயதில் காண நேர்ந்ததை நினைவு கூர்ந்துள்ளார். மின்சாரம் கூட வடகொரியாவில் பொதுவல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இடையூறு ஏற்படுத்த சீனா சதியா?



அமெரிக்க அதிபர் தேர்தலில் இடையூறு மேற்கொள்ள சீனா மிகப்பெரிய திட்டத்தை தீட்டியுள்ளதாக வெள்ளை மாளிகை குற்றஞ்சாட்டி உள்ளது.

அமெரிக்க அதிபர் தேர்தலை சீர்குலைக்கும் முயற்சியில் சீனா, ரஷ்யா, ஈரான் ஆகிய 3 நாடுகள் ஈடுபட்டுள்ளன எனப் புலனாய்வுக் குழுவின் தகவலை மேற்கோள் காட்டி, வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ராபர்ட் ஓ பிரையன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அரசியல் ரீதியாக பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் சீனா பெரிய இணைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இதற்கு எதிராக வலுவான நடவடிக்கையை அமெரிக்கா எடுத்துவருவதாகவும் அதில் வெற்றிபெறும் என்றும் ராபர்ட் ஓ பிரையன் தெரிவித்துள்ளார்.

## புலிகளை சிலர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான பாராட்டு விழா நேற்று யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்திருக்கிறது. தோல்விக்கு எவை காரணம் என வெளிப்படையாகத் தெரிந்தும் தோல்விக்கான காரணங்களை குழு அமைத்துத் தேடி ஆராய்கின்றனர்.

தேர்தல் காலங்களில் கூட்டமைப்புக்குள் இருந்த சிலர் விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்ளவில்லை, விடுதலைப் போராட்ட இயக்கங்களை ஏற்றுக்கொள்ளவில்லை, ஒட்டுமொத்த விடுதலைப் போராட்டத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை என கூறியதாலேயே கூட்டமைப்பு பாரிய தோல்வியைத் தழுவியது.

தீர்வுத் திட்டம் தொடர்பில் தமிழ் மக்களை தொடர்ந்து ஏமாற்றியதாலும் பாரிய பின்னடைவை கூட்டமைப்பு சந்தித்துள்ளது. தோல்விகளையும் தவறுகளையும் ஏற்றுக்கொண்டு எதிர்காலம் நோக்கி முன்னேறவேண்டும். இல்லையேல் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையை விட மோசமாக மாறிவிடும்.

ரெலோ எங்கு உள்ளதோ அங்குதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருக்கும். கூட்டமைப்பில் இருந்து யாரும் பிரிந்து செல்லலாம். ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பை அழிக்க முடியாது, அழிக்கவும் விடமாட்டோம் – என்றார்.

## ஓய்வுபெற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது.

சம்பவத்தில் அல்வாயைச் சேர்ந்த மகாலிங்கம் வின்சன் கோமகன் (வயது –63) என்ற வடமராட்சி வலயக் கல்வி அலுவலக முன்னாள் சேவைக்கால ஆசிரியர் ஆலோசகரே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றது என்று கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மகாலிங்கம் வின்சன் கோமகன் உயிரிழந்ததுடன், கச்சேரி – நல்லூர் வீதியைச் சேர்ந்த மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட உறுப்பினர்களுக்காக யாழில் நடந்த பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கிழக்கு மக்கள் கடந்தமுறை நாடாளுமன்ற தேர்தலோடு ஒப்பிடுகையில் இம்முறை 50ஆயிரம் வாக்குகளைக் கூட்டமைப்புக்கு குறைவாக வழங்கியுள்ளனர். கிழக்கில் மொட்டுக் கட்சிக்கு முதன் முதலில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கின்றது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அதிகூடிய விருப்புவாக்குகளோடு ஒரு ஆசனத்தைப் பெற்றிருக்கிறது.

அபிவிருத்தி, தொழில் வாய்ப் புக்களுக்காக மக்கள் அந்தப் பக் கம் சார்ந்திருக்கிறார்கள். இது நிரந்தரமானதல்ல என்பதனை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டு நிலையான கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியில் உள்ள சக்திகளோடு போராடியதைவிட கட்சிக்குள்ளே விருப்பு வாக்கிற்கான போராட்டம் உச்சமாக இருந்தது. விருப்பு வாக்குப் பிரச்சினை சில இடங்களில் அடிதடிகளில் முடிந்திருக்கின்றது.

ஆயுதப் போராட்டம் முடிவுற்ற பின்னர் ராஜபக்ஷ சகோதரர்களுக்கு எதிராக சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ போன்றோரை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஆதரித்திருந்தனர்.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வீ.விக்னேஸ்வரன் தமிழ் மொழி ஆதி மொழி என உரையாற்றியமைக்கு எதிர்ப்புக்கள் கிளம்பின. ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் யாருக்கு ஆதரவு அளித்தார்களோ அவர்களே அதிகளவில் எதிர்ப்புகளை வெளியிட்டனர். ராஜபக்ஷ சகோதரர்களைவிட சரத் பொன்சேகா, சஜித் தலைமையிலான எதிர்க்கட்சியினரே அதிக இனவாத கருத்துக்களை வெளியிட்டனர்.

சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு எதிரான துவேசத்தைத் தூண்டி வாக்கு வங்கியை அதிகரிப்பதே இவர்களது நோக்கம் என்பது வெளிப்படையாக தெரிந்தது. ராஜபக்ஷ சகோதர்களுக்கு ஆயுதப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்ததற்காகவும் சிங்கள மொழியையும், பௌத்த மதத்தையும் முன்னிலைப்படுத்துவதாலும் தெற்கில் பலத்த ஆதரவு பெருகியது. இதனை அவதானித்த எதிர்க்கட்சிகள் ராஜபக்ஷ சகோதரர்களின் வழிகளைக் கையாளத் தொடங்கியுள்ளன.

தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காகப் போராடிய நாம் ஒன்றுபடவேண்டிய தேவை உள்ளது. கிழக்கு மாகாணத் தொல்லியல் செயலணியில் பௌத்த பிக்குகளும், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளும் என முழுவதுமாக சிங்கள மொழி பேசுபவர்களே நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் தமிழர்கள் வந்தேறு குடிகள் என கூறுவதற்கான ஆதாரங்களை தேடிவருகின்றனர்.

இந் நிலையில் நாம் ஒன்றுபடாதுவிட்டால் தமிழர்கள் தேசிய இனமல்ல வந்தேறு குடிகள் என நிருபித்துவிடுவார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை என்ன செய்தார்கள் எனக் கேட்டவர்கள் தற்போது நாடாளுமன்றம் வந்திருக்கிறார்கள். இவர்கள் கூட்டமைப்பு செய்ததைவிட மேலதிகமாக என்ன செய்துவிடப் போகின்றார்கள் என்பதனை மக்கள் உணர்வார்கள் – என்றார்

## மாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபை முறைமையை ஒழிக்க வேண்டும் என ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற சமய நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது சில அரசமைப்புத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. எந்த அரசமைப்புச் சட்டத்தின்படியும் எந்தத் தலைவரும் சரியாக செயற்படவில்லை. மஹிந்த ராஜபக்ஷ மூன்று தசாப்தங்களாக இருந்து வந்த போரை முடிவுக்கு கொண்டு வந்தார். நிறைவேற்று அதிகாரம் காரணமாகவே அவர் அதனைச் செய்ய முடிந்தது. எனினும் 19ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட நபருக்கு எதனையும் உரிய நேரத்தில் செய்ய முடியாமல் போனது.

19ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்து 20ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வரவுள்ளனர். சிறந்த நபரிடம் இந்த அரசமைப்புச் சட்டம் சென்றால் நல்லது. கோட்டாபய ராஜபக்ஷ கெட்டவர் எனக் கூறவில்லை. காரணம் கோட்டாபய ராஜபக்ஷ இராணுவத்தில் கடமையாற்றிய அதிகாரி. அவர் இந்த நாட்டை நேசிக்கின்றார்.

இதனால், அரசமைப்புச் சட்டத்திற்கு அமைய அதிகாரங்கள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைத்தால் பரவாயில்லை. அவர் ஜனாதிபதியாக இருக்கும் வரை நல்லது. எனினும் சில நேரம் அந்தப் பதவி மூளையில்லாத ஒருவருக்குச் சென்றால் என்ன நடக்கும் என்பதை எண்ணிப்பார்க்க முடியாது. அப்படியான நபருக்கு அதிகாரம் கிடைத்தால் நாடும், அழிந்துவிடும்,நாட்டின் பிள்ளைகளும் அழிந்து விடுவார்கள்.

அதேவேளை, கடந்த இரண்டு ஆண்டுகளாக எவரும் மாகாணங்களை ஆட்சி செய்யவில்லை. நிர்வாகம் நடந்துக் கொண்டிருக்கின்றது. இதனால் மாகாண சபை எமக்கு தேவையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எமக்கு மாகாண சபைகள் தேவையில்லை. அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளதால், மாகாண சபைகளை இரத்துச் செய்யத் தலையிடவேண்டும். மாகாண சபைகளை ஒழிப்பது நல்லது– என்றார்.

# தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் தமக்குள் ஒன்றிணையவேண்டும்

### மூன்று கட்சிகளின் இளைஞர் அணிகள் நேற்று யாழில் கூட்டாகக் கோரிக்கை




யாழ்ப்பாணம்,செப்.07

இளைஞர்களுடைய செயல்பாடுகளைப் பார்த்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் தங்களுக்குள் ஒன்றுபடவேண்டும் எனத் தமிழ்க் கட்சிகளின் இளைஞர் அணியினர் தமது கட்சிகளின் சிரேஷ்ட தலைவர்களிடம் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தியாக தீபம் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு இடம்பெறப்போகும் நடைபவனி குறித்து அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வாலிபர் முன்னணித் தலைவர் க.பிருந்தாபன், சேனாதிராசா கலையமுதன், தமிழ் மக்கள் கூட்டணியின் இளைஞர் அணித் தலைவர் கி.கிருஷ்ணமேனன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி – மணிவண்ணன் அணி உறுப்பினர் ஆகியோர் நேற்று யாழில் கூட்டாக நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட கிருஷ்ணமேனன் மேலும் தெரிவிக்கையில் –

இளைஞர்களான எங்களுக்குள் எந்தவிதமான பிரிவினைகளும் முரண்பாடுகளும் இல்லை. அவ்வாறு இருந்தாலும் நாங்கள் தேசியத்துக்கான ஒரு விடயம் வரும்போது ஒற்றுமையான செயற்பாடுகளையே மேற்கொண்டு வந்துள்ளோம்.

இளைஞர்களாகிய எங்கள் செயற்பாடுகளை பார்த்துத் தலைவர்கள் தாங்களும் ஒன்றிணையவேண்டும். அவ்வாறு ஒன்றிணைந்தால்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வினையோ அல்லது ஏனைய விடயங்களையோ பேசமுடியும்.

எதிர்காலத்தில் ஒரு ஒற்றுமையான பயணத்தை மேற்கொள்ளுவதற்கு இது ஓர் ஆரம்ப புள்ளியாக இருக்கும். – என்றார்.

தியாக திபம் திலீபனின் 33 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு முள்ளிவாய்க்காலில் இருந்து நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவு தூபி வரை நடைபயணம் ஒன்று இடம்பெற இருக்கின்றது.

இந்த நடைபயணம் தமிழர் தாயகப் பொது அமைப்புகள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் இடம்பெற இருக்கின்றது.

எதிர்வரும் 21 ஆம் திகதி முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் இருந்து ஆரம்பமாகும் இந்த நடைபவனி 26 ஆம் திகதி யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தைச் சென்றடைய இருக்கின்றது.

இடம்பெற இருக்கின்ற நடைபவனியில் தாங்களும் கலந்துகொள்ள போகிறார்கள் என இலங்கைத் தமிழரசு கட்சியின் யாழ் மாவட்ட வாலிபர் முன்னணித் தலைவர் க.பிருந்தாபன் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் இளைஞர் அணித் தலைவர் கி.கிருஸ்ணமேனன் ஆகியோர் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.




காலைக்கதிர்
Kalaikkathir

# மன்னார் வளைகுடா கடல் ஊடாக இலங்கைக்கு தப்ப முயன்றவர் உட்பட மூவர் ஏர்வாடியில் கைது





(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்குள் சட்ட விரோதமாக உட்புக முயன்ற இலங்கையை சேர்ந்த ஒருவர் உட்பட மூவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டு மத்திய உளவுத்துறையின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மன்னார் வளைகுடா கடல் வழியாக சட்ட விரோதமாக தப்பிவர முயன்ற இலங்கையை சேர்ந்த ஒருவர் உட்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டமையோடு கடத்தல் சம்பவங்களுடன் இவர்களுக்குத் தொடர்புள்ளதா என இந்திய மத்திய உளவுத்துறை தீவிர விசாரணை நடத்தி வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த முகம்மது அலி (வயது 43) என்பவர் இலங்கையில் இடம் பெற்ற இறுதிக் கட்ட உள்ளநாட்டு பேரின் போது உயிரை காப்பாற்றி கொள்ளும் நோக்கில் 2006 ஆம் ஆண்டு விமானம் மூலம் தமிழகம் சென்றுள்ளார். விசாமுடிந்த பின்னரும் இலங்கைக்கு திரும்பி வராமல் தமிழகத்தின் பல்வேறு அகதிகள் முகாமில் சட்ட விரோதாகத் தங்கி வாழ்ந்து வந்துள்ளார்.

சட்டவிரோதமாக வசித்த முகமது அலி மீண்டும் இலங்கைக்கு திரும்பி வரும் நோக்கத்தில் ஏர்வாடி கடற்கரையில் பிளாஸ்டிக் பைப்புகளை பயன்படுத்தி மிதவை ஒன்றை தயாரித்து அதன் மூலம் இலங்கைக்கு தப்பி வந்து விடலாம் என திட்டமிட்டுமிதவையைதயார் செய்துள்ளார். இதனை கவனித்த அப்பகுதி மீனவர்கள் இது குறித்த ஏர்வாடி காவல் நிலையத்துக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த ஏர்வாடி காவல்துறையினர் முகமது அலி, மற்றும் அவருக்கு உதவிய சகோதரர் முகமது அசன் (35),நண்பர் சாகுல் ஹமீது (29) ஆகிய மூவரையும் கைது செய்தனர். பின், அவர்களிடம் இருந்த மிதவையை பறிமுதல் செய்து ஏர் வாடி காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக எடுத்துச் சென்றனர்.

விசாரணையில், இறுதிகட்ட உள்நாட்டு போரின் போது தமிழகம் வந்தார் எனவும், தற்போது உடல் நிலை சரியில்லை, மருத்துவம் பார்க்க பணம் இல்லாததால் மீண்டும் மன்னார் வளைகுடா கடல் வழியாக ஏர்வாடியில் இருந்து மிதவை மூலம் சட்டவிரோதமாக இலங்கைக்கு தப்பி செல்ல முயன்றார் எனவும் தெரிவித்துள்ளார்.

சமீப காலமாக தனுஷ்கோடி கடல் பகுதியில் இருந்து கஞ்சாவும் இலங்கையில் இருந்து தங்க கட்டிகளும் கடத்தப்பட்டு வருகின்றன. எனவே பிடிபட்ட மூன்று பேரும் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுவதற்காக ஏர்வாடி பகுதியில் பதுங்கி இருந்தனரா என்ற கோணத்தில் மத்திய உளவுத்துறை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

இவர்களிடம் இருந்து இந்தியப் பணம்,இலங்கை பணம், பாஸ்போர்ட் மற்றும் இலங்கை குடியுரிமை ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 4 வாள்களுடன் ஒருவர் வடலியடைப்பில் கைது

*யாழ்ப்பாணம், செப் 07*

*பல வருடத்துக்கு முன்பான வாள்கள் நான்குடன் ஒருவர் (வயது - 32) வடலியடைப்புப் பகுதியில் வைத்து சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சந்தேக நபர் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார். அத்துடன் அவரிடம் மீட்கப்பட்ட 4 வாள்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.*

*இந்தக் கைது நடவடிக்கை நேற்றிரவு இடம் பெற்றது.*

*பல ஆண்டுகளுக்கு முன்பான 4 வாள்களை விற்பனை செய்வதற்கு சந்தேக நபர் முற்பட்டுள்ளார்.*

*இந்த முயற்சி யாழ்ப்பாணம் சிறப்பு அதிரடிப் படையினருக்கு தெரிய வந்ததையடுத்து வாள்களை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் சந்தேக நபர் நேற்றிரவு அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.*

*மேலதிக விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.*

# ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!

**கொழும்பு, செப் 07**

**இலங்கையில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

**அதன்படி கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் விடுக்கப்பட்டுள்ளது.**




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.09.2020 இல் வெளியிடப்பெற்றது.